Registered as a Newspaper
பக்கங்கள் 16 விலை ரூ. 50

புதன் பொய்கை

# உதயன்

சுடர் : 38
கதிர் : 284
புதன்கிழமை 06 செப்ரெம்பர் 2023
ஆவணி 1... வள்... 2054



# உயிர்த்தஞாயிறுத் தாக்குதலின் சூத்திரதாரிகள் ராஜபக்சக்களே!

## சனல் -4 ஊடகம் 'பகீர்'தகவல்

**கொழும்பு, செப்ரெம்பர் 6**
**ராஜபக்சக்களுக்கு ஆட்சியைக் கைப்பற்ற ஒரு குழப்பமான நிலை தேவைப்பட்டது. ஆதலால், அவர்களின் மக்களை அவர்களே கொன்றனர். இது கசப்பான உண்மை -இவ்வாறு பிரிட்டனைத் தளமாகக் கொண்டியங்கும் சனல்-4 ஊடகம் ஆவணப்படுத்தியுள்ளது.**

»15

## ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்: சர்வதேச விசாரணை தேவை

சஜித் வலியுறுத்து

கொழும்பு, செப். 6
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரிகள் கண்டறியப்பட வேண்டும். உள்ளக விசாரணைமூலம் இதற்குத் தீர்வு காண முடியாது. எனவே, சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். அதற்கு அரசாங்கத்துக்கு முதுகெலும்பு உள்ளதா? என்று எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார்.
சனல்-4 வெளியிட்ட வீடியோ தொடர்பில் நேற்று நாடாளுமன்றத்தில் கடும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இதன்போது கருத்து வெளியிடுகையிலேயே சஜித் இவ்வாறு »15

## கொக்குத்தொடுவாயில் இன்று புதைகுழி அகழ்வு!

முல்லைத்தீவு, செப். 6
முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் சீரற்ற காலநிலை காரணமாக, நேற்றுக் கைவிடப்பட்டி »15

## வீடியோ முழுவதும் பொய் பெரமுனவினர் துடிதுடிப்பு

»15

## ஜனாதிபதியைக்கொல்ல 'சினைப்பர்' வீரர்தேவை

பேஸ்புக்கில் பதிவிட்டவரிடம் சி.ஐ.டி. தீவிர விசாரணை!

»15

## 'சனல் -4' வீடியோ தொடர்பில் ஆராய்வதற்குத் தெரிவுக்குழு!

கொழும்பு, செப். 6
உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பான 'சனல் - 4' வீடியோ தொடர்பில் அமைச்சரவையிலும் பேசப்பட்டது. இது தொடர்பில் ஆராய்வதற்கு விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பது »15









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### வடக்கு மாணவர்கள் பலரிடம்

# அடிப்படைத் தேர்ச்சி மட்டம் இல்லாமை பெரும் சவால்!

### வடக்கு கல்விப் பணிப்பாளர் குயின்ரஸ் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், செப். 6**

**வடக்கு மாகாணக் கல்வித்துறையில் தற்போது எதிர்கொள்ளும் பெரும் சவால் மாணவர்களிடையே அடிப்படைத் தேர்ச்சி மட்டம் இல்லாமையே. இந்தநிலைமையை மாற்ற முன்பள்ளிகளின் கல்வி முறைமையில் மாற்றங்களை ஏற்படுத்துவது அவசியம் இவ்வாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தெரிவித்தார்.**

வடக்கு மாகாணத்தின் கல்வி நிலைமைகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

வடக்கு மாகாணத்தில் மாணவர்களிடையே அடிப்படைத் தேர்ச்சி மட்டம் இல்லாமை கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. தரம் 5இல் இருந்து தரம் 6க்கு வகுப்புயர்த்தப்படும் மாணவர்களில் 23 வீதத்தினருக்கு அடிப்படைத் தேர்ச்சி மட்டம் இல்லாமை அவதானிக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் இந்த நிலைமைக்கு முன்பள்ளிகள் பிரதான காரணமாக இருக்கின்றன. முன்பள்ளிகளின் பிரதான செயற்பாடு மாணவர்களின் ஆற்றிவை விருத்தி செய்வதே என்கின்றபோதும், அது சரியான முறையில் பின்பற்றப்படுவதில்லை.

முன்பள்ளிகளில் தற்போது ஆங்கிலம் போன்ற மொழிகளைத் திணிப்பதையும், சிறார்களுக்கு தேவையற்ற விடயங்களைக் கற்பிப்பதையும் காண முடிகின்றது. அது அவசியமற்றது. சிறார்களின் ஆற்றிவு விருத்தியை முன்பள்ளிகள் சரியாகச் செய்யுமானால் மொழியறிவு உட்பட ஏனைய விடயங்களை மாணவர்கள் தாங்களாகவே பெற்றுக்கொள்ள முடியும்.

அடிப்படைத் தேர்ச்சி மட்டம் இன்மை, மாணவர்கள் வகுப்பேற்றப்பட்டாலும் தொடர்ந்த வண்ணமே இருக்கும். அது அவர்களின் கல்வி அறிவு மட்டத்தில் எப்போதும் தாக்கம் செலுத்தும். முன்பள்ளிகளுக்கான பொதுவான கற்பித்தல் முறை இல்லாமை பெரும் குறைபாடாக இருக்கின்றது. ஒவ்வொரு முன்பள்ளியும் ஒவ்வொரு விதத்தில் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன. அதை ஒழுங்குபடுத்த வேண்டியது அவசியம்.

பெற்றோரும் தங்கள் பிள்ளைகள் விடயத்தில் கவனம் எடுத்தல் அவசியம். ஆனால் தற்போது பெரும்பாலான பெற்றோரின் நேரம் தொலைக்காட்சியுடன் செலவாகின்றது. பெற்றோருக்கும், பிள்ளைகளுக்குமான தொடர்பாடலைத் தொலைக்காட்சிகள் விழுங்கியுள்ளன. மாணவர்களுக்கு பெற்றோரின் வழிகாட்டல்கள் எப்போதும் அவசியம். தற்போது வெளியாகியுள்ள உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை ஆராயும் போது, விவசாயிகள் மற்றும் வசதி குறைந்தவர்களின் பிள்ளைகள் சிறந்த பெறுபேற்றையும், கல்வியறிவு கொண்ட வசதியானோரின் பிள்ளைகள் குறைந்த பெறுபேற்றையும் பெற்றுள்ளமையை அதானிக்க முடிக்கின்றது. அதன் காரணங்களைப் பெற்றோரும், ஏனையோரும் ஆராய்ந்தறிவது அவசியமானது.

பாடசாலைகளில் முறைசாராக் கல்வி முறையை ஊக்குவிக்க வேண்டும். மாணவர்களுக்கு கைபேசி திருத்துதல், உள்ளூர் உற்பத்திப் பொருள் பயிற்சிகள், திருத்த வேலைகள் போன்ற தொழில்முறைக் கல்வியைப் பாடசாலைக் காலத்திலேயே வழங்க முயற்சிக்க வேண்டும். பாடசாலையை விட்டு வெளியேறும் போது மாணவர்கள் சுயதொழில் ஒன்றை மேற்கொள்ளக் கூடிய திறன் கொண்டவர்களாக மாற்றப்பட வேண்டும் -என்றார். (எ-26)


## உலகை ஆளும் ஊடகத்துறைக்குள் நீங்களும் பிரவேசிக்க விருப்பமா ?




**உதயன் ஊடகப் பயிற்சி - 2023**

- உங்கள் ஒவ்வொருவரையும் பட்டைதீட்டி ஊடகத்துறையில் மிளிரச்செய்வதற்கு "உதயன்" தயாராகின்றான்.
- உதயனின் இந்தப் பயணத்துடன் கைகோர்க்க உங்களுக்கு விருப்பமா?
- அச்சு, இலத்திரனியல் ஊடகத்துறையின் அடிப்படைகள் மூத்த ஊடகர்கள், பல்கலை விரிவுரையாளர்களால் போதிக்கப்படும்.
- ஒரு மாத காலம் பயிற்சி மற்றும் ஊடகப்பணி தொடர்பான அனுபவங்களைப்பெற முடியும். அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும் மற்றும் பயிற்சி முடிவில் திறமையானவர்களுக்கு வேலைவாய்ப்பிற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுக்கப்படும்.
- 18 - 30 வயதுக்கு இடைப்பட்ட இரு பாலரும் விண்ணப்பிக்க முடியும்.
- பயிற்சிகள் யாவும் யாழ்ப்பாணத்திலுள்ள உதயன் தலைமை அலுவலகத்தில் வார நாட்களில் நடைபெறும்.

உங்கள் சுயவிவரக் கோவையை 10.09.2023 இற்கு முன்னர் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு அல்லது **digital@uthayan.com** மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.


# பாடசாலை மாணவர்களுக்கு சீருடைத் துணிகள் அன்பளிப்பு



யாழ்ப்பணம், ஒக.6

குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தியாலய மாணவர்களுக்கு சீருடைத் துணி வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

முன்னாள் வடக்கு சிவில் பாதுகாப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும் சமூக சேவையாருமான த.கணேச நாதனின் நிதி உதவியில் 200 பாடசாலை மாணவர்களுக்கான இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான சீருடைத் துணிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஹிந்த குணரட்ண, வடமாகாண கல்விப்பணிப்பாளர் குயின்ரஸ், முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் த.கணேசனாதன் மற்றும் மாணவர்கள், பெற்றோர், பொலிஸ் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சண்டைக்குப்போய் வீரன் எண்டு பேர் எடுத்த காலம்போய், இப்ப சண்டைக்குப் போகாதவனுக்குத்தான் வீரன் எண்ட பேரும் புகழும் கிடைக்கிற காலம் வந்திட்டுது. தங்கட பேர் நாலு இடத்தில அடிபட்டு, சனம் தங்களை ஒரு வின்னர் எண்டு நினைக்கவேணும் எண்டுதான் எல்லா அரசியல்வாதிமாரும் நினைக்கினம். அதிலையும் எங்கட அரசியல் வாதிமாருக்கு, ஒவ்வொருநாளும் தங்கட பேர் பேப்பர்களில வராட்டி அண்டையான் நாள் பத்தியப்படாமலே போடுமாம். அதால காலைக்கடனை முடிக்கினமோ? இல்லையோ? அறிக்கை விடுறது, ஊடகச்சந்திப்புவைக்கிறது, பரபரப்பான சம்பவம் நடக்கிற இடங்களுக்குப் போய் கருத்துக் கந்தசாமியா மாறுறது எண்டு தங்கட விலாசம் காட்டுற விசயங்களை மறக்காமல் செய்யினம்.

சுதந்திர தினத்தண்டு கம்பஸ்காரர் வைச்ச ஒரு ஆர்ப்பாட்டத்துக்குப் போனதெண்டு சிலரை நீதிமன்றம் வழக்குக்கு கூப்பிட்டிருந்தது. முந்தநாள் அந்த வழக்கின்ர தவணை. ஆனால், அந்த வழக்கில் கூப்பிடப்பட்ட மூண்டு முக்கியமான அரசியல்வாதிமார் கோர்ட்ஸுக்கு வரேலை. செல்வம், சார்ள்ஸ் எண்டு ரெண்டு எம்.பி.மாரும், முன்னாள் எம்.பி.யான சிவாஜிலிங்கமும் தான் இப்பிடி கோர்ட்ஸுக்குப் போகாமல் ஒளிச்சு விளையாடின ஆக்கள். அவை கோர்ட்ஸுக்குப் போகேலை எண்டதால, உடன பிடியாணையை கோர்ட்ஸ் போட்டிட்டுது. இந்தப் பிடியாணையைத்தான் அந்த மூண்டுபேரும் எதிர்பார்த்தவை. ஏனெண்டால், இப்பிடி பிடியாணை போடுறளவுக்கு சனத்துக்காகப் போராடின வீரர், சூரர் எண்டு பேர் கிடைக்குமெல்லோ. ஆனால், இந்த வழக்குக்காக கொழும்பில இருந்தெல்லாம் ஒரு எம்.பி. வந்திருக்கிறார். சனத்துக்காகப் போராடின மற்றவையும் கோர்ட்ஸை மதிச்சுத்தானே போனவை. ஆனால், கடைசியில பேர், புகழெல்லாம் ஆருக்கு? இப்பிடி கோர்ட்ஸுக்குப் போகாமல் ஒளிச்சு நிண்டவைக்குத்தானே.

சிலவேளை பட்சி சொல்றதுக்கு மாறா, இப்பிடி பேர் எடுக்கிறதுக்காக அவை கள்ளப்பிளான் ஒண்டும் போடாமல், உண்மையாவே ஏதும் வருத்தம், துன்பம் வந்து வரேலாமல் போட்டுதோ தெரியேலை எண்டு சிலர் நினைப்பியள். அவைக்காகவும் ஒருதகவல். அண்டைக்கு கோர்ட்ஸுக்கு வராமல், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட எம்.பி.மாரில ஒருத்தர், வழக்கு நடந்த அண்டு கொடிகாமத்தில நடந்த ஒரு கலியாண வீட்டுக்கு வந்து போயிருக்கிறார். அப்பிடியே ஒருக்கா கோர்ட்ஸையும் அவர் எட்டிப் பார்த்திருக்கலாமே? வந்தால் பிறகெப்பிடியாம் பிடியாணை கிடைச்சு பேர் எடுக்கிறது? அரசியல்ல இதெல்லாம் சகஜம்ப்பா.



- பட்சி

padsi@uthayan.com

## சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், செப். 6

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்த சுக்கிரவார சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளைமறுதினம் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

'சூர் மார்பும் குன்றும் துளைத்த வேல்'என்னும் விடயப்பொருளில் இளஞ்சைவப்புலவர் நித்திய பாபுதரன் சிறப்புச் சொற்பொழிவை ஆற்றவுள்ளார்.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஏ-ரி2)

* * *

யாழ்ப்பாணம், செப். 6

நீர்வேலி, சிறுப்பிட்டிமேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவு நேற்றுமுதல் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைவரை மாலை 6 மணிக்கு சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

சைவ புலவர்கள் செ. த. குமரன், சி. கா. கமலநாதன், பொன். சந்திரவேல், ஆகியோரினதும் இளஞ்சைவப் புலவர்களான ச. நவநீதன், க. கைலநாதன், கயிலைவாசன் மற்றும் நித்திய பாபுதரன் ஆகியோர்களின் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன. சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஏ-ரி2)

* * *

யாழ்ப்பாணம், செப். 6

சைவ வாழ்வியலில் பெரியபுராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவஸ்ரீ. பால. திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்த பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர்22(செருத்துணை நாயனார்) நாளைமறுதினம் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு புத்தூர் கிழக்கு கருப்பை ஈஸ்வரன் திருவருள்மிகு ஜெகதாம்பிகை சமேத வேதபுரீஸ்வரர் தேவஸ்தான பிரதான மண்டபத்தில் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

சேக்கிழார் பெருமான் குருபூஜையைத் தொடர்ந்து 'திருவாரூரில் மாலை கட்டிக் கொடுக்கும் திருத்தொண்டு புரிந்த நாயனார்' என்னும் விடயப்பொருளில் சைவப்புலவர் செ. த. குமரன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஏ-ரி2)




சாரங்கா ஜுவலரி
RIA, Western Union, Money gram
(நியூ சாரங்கா ஜுவலரியும், சாரங்கா நகைமாடமும் ஒரே கட்டடத்தில் இயங்குகின்றது)
இல.157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel : 021 222 6972, Fax : 021 222 8869
E-mail :sarankajewejjers@yahoo.com, web : www.sarangajawejjwes.com




### நம் துயர் தீர்த்திடய்யா

ஆடிவரு மயிலேறும் ஆணழகா – முருகா
நம் அவலங்கள் மண்ணினிலே மறைய
கோடிமுறையுனைப் பணிந்தோம்
கோமகனே மாமகனே
கொண்டவள்ளி தெய்வானையுடனுறையும்
வேலவனே
தேடியுனைச் சரணடைந்தோம் தேவாதி தேவனே
தேவர்களின் குறைதீர்த்த வடிவேலனே
ஓடிவந்து வேலெடுத்து
நம் துயர் தீர்த்திடய்யா ஓங்காரவேலவனே

க.நாகேஸ்வரா,
சண்டிலிப்பாய்.

### சர்வ நலன்களை கரம்கூப்பி பெற்றிடு

நாதனுக்கே நாதனாம் சுவாமிநாதனை வழிபட்டு
அறிவைப் பெற்றிடு தானைக்கே அதிபதியாம்
தேவசேனாதிபதியை வணங்கிடு
மறத்தை ஒருங்கே வளர்த்திடு
அசுரனுக்கே அசுரனாம் சூரன் மமதையை
வதையிட்டு வேலும் மயிலுமாய் அவதரித்து
பூரண அடைகலம் நல்கியவனை பூசித்திடு
தமிழ் தெய்வ மகனை மானசீகமாய் வழுத்திடு
சர்வநலன்களை கரம்கூப்பி பெற்றிடு

எஸ்.யு.சிவம்,
ஏழாலையம்பதி

# நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், செப். 6

புலம்பெயர் எழுத்தாளர்கள் இருவரது நூல்களின் வெளியீட்டு விழா எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் திருமறைக்கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் சிராஜ் மஷூர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இளவாலை விஜயேந்திரன் எழுதிய 'எந்தக் கங்கையில் இந்தக் கைகளைக் கழுவுவது' எனும் கவிதை நூலும் சஞ்சயன் செல்வமாணிக்கம் எழுதிய 'நினைவு மறந்த கதை' எனும் நூலும் வெளியிடப்படவுள்ளன. (ஏ-ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13,000 ஹெக்ரேயரில் யாழில் பெரும்போகம்



## விவசாயப் பணிப்பாளர் தகவல்

**யாழ்ப்பாணம், செப்.6**

**யாழ்.மாவட்டத்தில் சுமார் 13 ஆயிரம் ஹெக்ரேயர் வரையிலான நிலப்பரப்பில் இம்முறை பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.**

தற்போது வறட்சியான காலநிலை நிலவுவதால் நெற்செய்கையை ஆரம்பிப்பதற்கு முன்னதாக வயல்களை உழுது சீர்செய்யும் நடவடிக்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

பெரும்போகத்துக்குத் தேவையான விதை நெல் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

பி.ஜி. 406, ஏ.ரி, 302 ஆகிய விதை இன நெல்களை விவசாயிகள் கமநலசேவை நிலையங்களினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

முளைதிறன் கூடியதும் வீரியம் மிக்கதுமான இந்த விதை இன நெல்களையே செய்கையாளர்கள் பயன்படுத்துவது சிறந்தது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-17)

# முழங்காவில் குளங்களை சீரமைக்கக் கோரிக்கை!

## அந்தப்பகுதி மக்கள் விடுத்தனர்

கிளிநொச்சி, செப். 6

கிளிநொச்சி - முழங்காவில் கிராமத்திலுள்ள முழங்காவில் குளம் மற்றும் கதிராவில் குளம் என்பவற்றைச் சீரமைத்துத் தரவேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். முழங்காவில் கிராமத்தில் கூடுதலான குடும்பங்கள் ஆழ்துளைக் கிணற்றை நம்பியே வாழ்கின்ற நிலையில் தற்போது இருகுளங்களும் முற்றாக வற்றியுள்ளன.

எதிர்காலத்தில் இரு குளங்களின் அணைக்கட்டுக்களையும் உயர்த்தி புனரமைப்பதன் மூலம் வறட்சியான காலங்களிலும் குடிதண்ணீருக்கான நெருக்கடியைத் தவிர்க்கமுடியும் என்று கிராம மக்கள் தெரிவித்தனர். பூநகரிப் பிரதேசத்தில் பல சிறிய குளங்கள் புனரமைக்கப்பட்டு வரும் நிலையில் மேற்படி இரு குளங்களையும் புனரமைப்பதன் மூலம் முழங்காவில் மக்கள் நன்மையடைவார்கள் எனவும் தெரிவித்துள்ளனர். (எ-ரி-2-13)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 24 • 01 • 1949



மறைவு 08 • 08 • 2023

கடந்த (08.08.2023) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

**அமரர் வீரசிங்கம் சரஸ்வதி (கிளி)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (05.09.2023) செவ்வாய்க்கிழமை அதிகாலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (07.09.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

பங்களா வீதி,
மீசாலை மேற்கு,
மீசாலை.

குடும்பத்தினர்
077 304 9887

(cr.40096) (N.1)



# மண்டோஸ் புயல் பாதிப்பு முல்லையில் நிவாரணம்

முல்லைத்தீவு, செப். 6

முல்லைத்தீவு மாவட்டத்தில் மண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்டவர்களில் தெரிவுசெய்யப்பட்ட 40 பேருக்குத் தலா 45 ஆயிரம் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனமான மெசிடோவால் இந்த உதவித்திட்டம் கையளிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்ட 172 பயனாளிகளுக்குக் குறித்த திட்டத்தின் கீழ் உதவி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-19)

N Selections
EXCEPTIONAL CARE CENTERED ON YOU

புடைவைக் கண்காட்சியும் விற்பனையும்

அனுபவமுள்ள துறைசார் நிபுணர்களால்
இந்தியாவில் நேரடியாகக் கொள்வனவு செய்யப்பட்ட
நியாயமான விலையில் தரமான புடைவைகள்.

செப்ரெம்பர்
07, 08, 09, 10, 11
2023

காலை 10 மணி முதல்
இரவு 8.30 மணிவரை

352, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# 'சனல்- 4' கொடுத்த அதிர்ச்சி மருத்துவம்

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தில் நாட்டில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக அரங்கேற்றப்பட்ட சதிநடவடிக்கையே என்று சர்வதேச ஊடகமான 'சனல் –4 கூறுகின்றது. சர்வதேசரீதியில் பிரபலமானதும் புலனாய்வுச் செய்தியறிக்கையில் பெயர்பெற்றதுமான அந்த ஊடகத்தின் தகவல்களை பத்தோடு பதினொன்றாக ஒதுக்கிவிட முடியாது.

இலங்கையை ஆட்சி செய்த அரசாங்கங்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக எப்போதும் இனவாதம், சிறுபான்மையினருக்கு எதிரான கருத்தியல் என்பவற்றையே பெரும்பான்மை மக்களை மடக்கும் ஆயுதங்களாகக் கொண்டிருக்கின்றன. நாட்டில் உள்நாட்டுப் போர் நடந்தபோது, தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதத்தின் ஊடாக தெற்கு அரசியல்கட்சிகள் வாக்கு வேட்டை நடத்தின. போர் முடிவுக்கு வந்த பின்னர் நாட்டின் மீட்பர்களாகத் தங்களை அடையாளப்படுத்தி கோலோச்சிய ராஜபக்சக்கள் மீதான அபிமானம் குறைந்து, அதிகாரம் பறிபோயிருந்த சந்தர்ப்பத்திலேயே நாட்டை – உலகை உலுக்கிய கொடூரத் தாக்குதல்கள் இலங்கையில் அரங்கேறியிருந்தன.

அரசுக் கட்டிலில் இருந்து அகற்றப்பட்ட ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சி அதிகாரத்துக்கு வருவதற்காகவே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் திட்டமிட்டு நடத்தப்பட்டன என்பதை சில சாட்சியாளர்களின் கருத்துகளுடன் வெளிப்படுத்தியுள்ளது 'சனல்–4'. ராஜபக்சக்களுக்கு நெருக்கமான இராணுவ அதிகாரிகள், புலனாய்வு அதிகாரிகள் என்போரின் ஒத்துழைப்புடன் இந்தப் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று அந்தச் சாட்சியாளர்கள் கூறுகின்றனர்.


உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடந்து நான்கு ஆண்டுகள் கடந்துள்ளபோதும் இன்னமும் விசாரணைகள் நிறைவடையவில்லை. அந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக, 2021ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்ட விசாரணை அறிக்கையும் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை. இந்தத் தாக்குதல் சம்பவத்தில் நாட்டின் அதியுயர் பதவிகளில் இருப்பவர்களின் மறைகரங்கள் உள்ளன என்று பல தரப்புகளும் குறிப்பாக கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்டோர் தொடர்ச்சியாகக் கூறிவரும் நிலையில், அதற்குச் சான்று சேர்ப்பது போன்று 'சனல்–4' சில தகவல்களை வெளிப்படுத்தி, ராஜபக்சக்களுக்கு அதிர்ச்சிமருத்துவம் கொடுத்துள்ளது.

பதவியைக் கைப்பற்றுவதற்காகவே, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் என்ற சதியில் நாட்டு மக்களின் உயிர்கள் பலியெடுக்கப்பட்டிருக்குமானால் அதைப் போன்றதொரு மோசமான செயல் வேறொன்றும் இல்லை. அரசாங்கம் மீண்டும் விசாரணை, ஆணைக்குழு என்று சாக்குப், போக்குக் கூறிச் சமாளிக்காது உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கை உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் பகிரங்கப்படுத்தவேண்டும். இந்தத் தாக்குதல் சம்பவத்தில் உயர்மட்டத்தில் உள்ள பலர் தொடர்புகளைக் கொண்டுள்ளனர் என்று சொல்லப்படும் நிலையில், விசாரணையில் கண்டறியப்பட்ட தகவல்கள் பொது மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். ஆனால், ராஜபக்சக்களின் நிழலில் பதவிச்சுகம் கண்டு கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணிலோ அவரது அரசாங்கமோ இவற்றையெல்லாம் செய்யப்போவதில்லை என்பதே யதார்த்தம்.

## நாளொரு நல்வார்த்தை

ஒரு துளி பேனா மை
பத்து இலட்சம் பேரை
சிந்திக்க வைக்கும்.

- பைரன் -




# பொலிஸ் அதிகாரம் இல்லாத 13 இல் ரணில் ஆர்வம்

கொழும்பு, செப். 6

**அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள பொலிஸ் அதிகாரத்தை தவிர ஏனையவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியாகச் செயற்படுகிறார்.**

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்;

13 ஐ நடைமுறைப்படுத்தும் விடயத்தில் ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றார். 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் இந்தியப் பிரதமர் மோடியுடனும் பேச்சு நடத்தினார். ஆயினும் 13 இலுள்ள பொலிஸ் அதிகாரம் தொடர்பில் சர்ச்சை உள்ளது. அதனைத் தவிர ஏனைய விடயங்களை ஜனாதிபதி நடைமுறைப்படுத்துவதில் உறுதியாகவுள்ளார் - என்றார். (ச-44)

# மக்களுக்குத் தீர்வளிக்காது ஆட்சியைப் பிடிக்க மும்முரம்

## எதிர்க்கட்சி சுட்டிக்காட்டு

அரசாங்கம் மக்களின் உண்மையான பிரச்சினைகளை இன்னமும் இனங்காணவில்லை. மக்கள் நெருக்கடியிலுள்ள இந்தவேளையில் ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக புதிய அரசியல் கூட்டணிய அமைக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் மும்முரம் காட்டிவருகின்றது - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் அண்மைய அறிக்கையில் இலங்கையின் மிக மோசமான நிலைமை தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய சந்தர்ப்பத்தில் எரிபொருள், எரிவாயு விலைகளை உயர்த்தியுள்ளது, இது நியாயமற்றதாகும். அரசாங்கம் மக்களின் உண்மையான பிரச்சினைகளை இன்னும் இனங்காணவில்லை.

ஏற்கனவே இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்கவும் இல்லை.

அதற்கான வேலைத்திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை - என்றார். (ச-இ)

# ரணில் போட்டியிட்டால் பதுங்குவாராம் சஜித்

கொழும்பு, செப். 6

ரணில் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கினால் சஜித் பிரேமதாஸ போட்டியிடமாட்டார் என்பது திண்ணம் என்று ஐ.தே.க. பொதுச் செயலர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயம் தான் களமிறங்குவேன் என சஜித் பிரேமதாஸ அறிவித்துள்ளார். இந்தநிலையிலேயே பாலித ரங்கே பண்டார மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-


கட்சிக்குள் தலைமைத்துவப் பிரச்சினை வந்தபோது சஜித் பிரேமதாஸ, கருஜயசூரியவை பலிக்கடாவாக்கி விட்டு ஓடினார். நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தெரிவின்போதும் டலஸை பலிக்கடாவாக்கித் தப்பினார். ரணில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் சஜித் பிரேமதாஸ போட்டியிடமாட்டார் என்பது உறுதி - என்றார். (ச-44)

## நாளை

07.09.2023
வியாழக்கிழமை
ஆவணி 21

சுபநேரம் : 07.34 - 09.04
ராகுகாலம் : 01.34 - 03.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூரில் மகிழ்வூட்டும் சுகாதாரத் திருவிழா

நல்லூரில் முன்னெடுக்கப்பட்டுவரும் 'சுகாதாரத் திருவிழாவில்' பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கெடுக்கின்றனர். புற்றுநோயை ஆரம்பத்தில் கண்டறியும் மையமும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையும் இணைந்து 'உதயன்' ஊடக அனுசரணையுடன் இந்த சுகாதாரத் திருவிழாவை ஏற்பாடு செய்துள்ளன. கடந்த முதலாம் திகதி ஆரம்பமான இந்த உணவுத் திருவிழா எதிர்வரும் 15ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

'சுகாதாரத் திருவிழா'வில் அதிநவீன மருத்துவப் பரிசோதனைகளும், மருத்துவ நிபுணர்களால் மருத்துவ ஆலோசனைகளும் இலவசமாக வழங்கப்படும் நிலையில், மக்களை மகிழ்விக்கும் நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தினமும் மாலை 5 மணி முதல் இரவு 9 மணிவரை நல்லூர் மேற்கு வீதியிலுள்ள மங்கையர்க்கரசி வித்தியாலய மைதானத்தில் சுகாதாரத் திருவிழாவும், மகிழ்விக்கும் நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

'சுகாதாரத் திருவிழா'வில் மக்கள் பயன்பெறும் பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. கண்களை ஸ்கான் செய்து செயற்கை நுண்ணறிவு பகுப்பாய்வால் புற்றுநோயைக் கண்டறியும் தொழில்நுட்பம் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தொழில்நுட்பம் ஆசிய நாடுகளில் முதன்முறையாக இங்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

புற்றுநோய் மருத்துவம், நீரிழிவு மருத்துவம், உண மற்றும் ஊட்டச்சத்து மருத்துவம், விளையாட்டு மருத்துவம், போதைப் பொருள் பழக்கத்தில் இருந்து விடுபடுதல் போன்ற விவரணக் கலந்துரையாடல்களும் தினமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

சுகாதாரத் திருவிழாவில் ஆற்றுகை செய்யப்படும் நாடகங்கள் சிலவற்றின் அறிமுகங்கள்:

## சிப்பி

**எழுத்துருவாக்கம் நெறியாள்கை : சரண்யா சிவராசா**

இளம்வயதில்கணவனை இழந்தபெண் ஒருவர் ஆண்துணையற்று, தன்வாழ்க்கையை முன்கொண்டுசெல்வதற்காக எதிர்கொள்ளும் சவால்களைப் பேசுபொருளாகக் கொண்ட இந்த நாடகமானது, பெண்ணின் தன்மை மற்றும் படர்க்கை மனநிலைகளினை மையப்பாத்திரங்களாகக் கொண்டு, சமூகத்தை எதிர்கொள்வதை, விதவைப் பெண்ணொருவரின் உணர்ச்சிப் போராட்டத்தினூடே காட்டுகின்றது.

ஆழ்மன ஆசைகள் தன்மையாகவும் சமூகக் கட்டுக்கள் படர்க்கையாகவும் இருப்பதால், அந்தக் கட்டுக்களை அவிழ்ப்பதில் ஏற்படும் மனப்போராட்டமானது, பெண்ணுடைய வேணவாக்கள், எதிர்காலம் பற்றிய கனவுகள் போன்றவற்றை நிறைவேற்றமுடியாத சூழலுக்குத் தள்ளப்படுகின்றது.

மனித மனங்களைக் குறியீடாகக் கொண்டு, அந்த மனித மனங்களில் விதவைப்பெண்கள் பற்றிய நோக்கு எவ்வாறு படிந்திருக்கின்றது என்ற சமூக யதார்த்தத்தை இந்தநாடகம் வெளிக்கொணர முயல்கிறது.

**நடிகர்கள் :** கே.ஜான்சிகா, ப.ஜீவிதா, க.நிவேதிகா, த.அனுப்ரியங்கா, ஜோ.நிலவினி
**மேடை முகாமையாளர்:** ஜோ.நிலவினி

## மரபுச்சுமை

**எழுத்துருவாக்கம், நெறியாள்கை: ஜீவிதா பரமானந்ததயாளன்**

ஒவ்வொரு சமூகமும் பெண் சார்ந்த சமூக எதிர்பார்ப்புகளையும் சமூகம் சார்ந்த எதிர்பார்ப்புகளையும் பெண் என்ற ஒற்றை உடலில் திணிக்க முயல்கின்றது. உடல் என்பது வெறும் உயிரியல் கூறு என்றாலும் கூட, பெண்களின் உடல்கள் அந்தந்த சமூகங்களாலும் பண்பாடுகளாலுமே கட்டமைக்கப்பட்டிருக்கின்றன.

பெண்களின் கனவுகளும் அவர்களது முன்னெடுப்புகளும் மரபு என்ற ஒற்றைச் சொல்லினால் எவ்வாறு ஒடுக்கப்படுகின்றன என்பது, விளையாட்டில் ஆர்வம் கொண்ட பெண்ணின் விருப்பம் மறுக்கப்படுவதனூடாகக் காட்டப்படுகின்றது.

கூடைப்பந்தாட்டத்தில் ஈடுபாடும் திறமையும் கொண்ட பெண்ணின் மீது சமூகத்தால் நிகழ்த்தப்படும் அடக்குமுறைகளாகவும் வன்திணிப்புகளுமாக மரபு எப்படி ஒரு சுமையாக மாறுகிறது என்பதையும் அந்த மரபுச்சுமையை எவ்வாறு கடக்கவேண்டும் என்பதையும் இவ்வாற்றுகை பேசுகின்றது.

**நடிகர்கள்:** ப.ஜீவிதா, அ.தேனுஜா, சி. சரண்யா, ந.யாழினி, கே.யான்சிகா

## 'நீயே பெயரை வைச்சுக்கொள்'

**எழுத்துருவாக்கம், நெறியாள்கை : கோ. கஜீபன்**

அதிகாரத்தின் அதி உச்ச அதிகார எல்லை என்பது, மேலிருந்து கீழ்நோக்கியதான படிநிலை மாற்றத்தில் வெவ்வேறு அளவுகளில், வெவ்வேறு வீச்சுக்களில் விரியக்கூடியது.

அதிகார நிலைகளின் ஒவ்வொரு படிகளில் அதிகாரம் என்பது அடக்குவதாகவும் அடங்குவதாகவும் ஒருங்கே வெவ்வேறு தளங்களில், வெவ்வேறு நபர்களில், வெவ்வேறான நேரங்களில் வெவ்வேறான வடிவங்களை எடுத்துக்கொள்கின்றது. குடும்பம் முதல் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள், நாடாளுமன்றம் என இந்த அதிகாரக் கட்டமைப்பு பரந்திருக்கின்றது. இந்தத் தளங்களை அடிப்படையாகக் கொண்டு அதிகார வர்க்கத்தால் ஒடுக்கப்படுகின்றவர்களையும் வெளியே சொல்ல முடியாத அவர்களது உளச்சிக்கல்களையும் இந்நாடகமானது பேசுகின்றது. அதிகாரத்தைக் கேள்விகேட்கமுடியாத அனைவருக்குமான குரலாகவும் அதிகாரத்தைக் கேள்வி கேட்பதாகவும் இந்தநாடகம் இருக்கின்றது.

**நடிகர்கள் :** த.கவிவர்ஜினி, க.கஜானன், ரொ. மக்லின் யூலியட், பா.சோபனா
**மேடை முகாமையாளர்:** பா.சோபனா
**இசை:** வோல்ரர் இருதயராஜன் டிலக்சன்

## நேர காலம்

**எழுத்துரு : குழந்தை ம.சண்முகலிங்கம்**
**நெறியாள்கை : கலாநிதி க.ரதிதரன்**

ஈழத்து தமிழரங்கின் முதுபெரும் நாடகக் கலைஞர் கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கத்தால் 2011ஆம் ஆண்டு எழுதப்பட்ட 'நேர காலம்' எனும் குறுநாடகம், அந்தக் காலத்தில் காணி உறுதிகளை உடனடியாகப் பதிவு செய்ய வேண்டும் என்ற கட்டளையின் பின் விளைவால், ஒரு குடும்பத்தில் நிகழும் சமூக இடர்ப்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. போர் முடிக்கப்பட்டு ஏதோ ஒரு அபகரிப்பு அல்லது பறிப்பு நடவடிக்கையாக இந்தக் கட்டளை அந்தக் காலத்தில் விமர்சிக்கப்பட்டது.

சண்முகலிங்கத்தின் மொழிநடை வீச்சும் சொல் விளையாட்டுகளும், அங்கதச்சுவையும் ததும்ப எழுதப்பட்ட இந்த நாடகம் தமிழ் சமுதாயத்தின் சமூக நிலைப்பாட்டை தெட்டத் தெளிவாகக் காட்டும். சண்முகலிங்கத்தின் நாடகம் நாடக துறைசார் மாணவர்களால் ஆற்றுகை செய்யப்படுவது எல்லோராலும் பெருமைப்பட வேண்டியதாகும்.

**நடிகர்கள் :** வே.சர்ஜினி, க.நிவேதிகா, த.துலக்சன்
**இசை :** ஜெ.ஜஸ்ரின் ஜெலூட், ச.உசாந்தன், செ. ராகவேந்தன்
**உதவிநெறியாள்கை:** தை.யஸ்ரின் ஜெலூட்
**வேட உடை:** த்.அனுபிரியங்கா
**ஒப்பனை:** து. மதிசாலினி
**ஒளியமைப்பு:** நிக்கலஸ்
**காட்சியமைப்பு:** டே.கோகிலராஜ், ரா.திவ்யா
**மேடை முகாமை:** க.நிவேதிகா

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத் திருவிழா கால நடைமுறைகள்

யாழ்ப்பாணம், செப்.6

வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவம் ஆரம்பமாகவுள்ள நிலையில், ஆலய மஹோற்சவ காலத்தில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் தொடர்பாக வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

கடந்த முதலாம் திகதி மஹோற்சவ ஏற்பாட்டுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய இந்த நடைமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன என்று பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை ஸ்ரீ தெரிவித்துள்ளார். ஆலயத் தேரோடும் வீதிகளில் நடைபாதை வியாபாரிகளுக்கும், தற்காலிக கடைகளுக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது, மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆலயச் சூழலில் நிரந்தரமாக இயங்கிவந்த கடைகள் மட்டும் தொடர்ந்தும் இயங்கி வருவதற்கு அனுமதிக்கப்படும். இயங்கிவரும் வியாபார நிலையங்களை விரிவாக்க அனுமதி இல்லை. ஆலய மஹோற்சவ காலத்தில் உணவு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டி இருப்பின் உரிமையாளர்கள் நாட்டின் எப்பாகத்திலாவது உணவு நிலையம் நடத்திய மற்றும் மருத்துவச் சான்றிதழ் கொண்டிருந்தல் வேண்டும்.

உணவு நிலையங்களில் உணவைக் கையாள்பவர்கள் மற்றும் அன்னதான மடங்களில் பணிபுரிபவர்கள் அனைவரும் மருத்துவச் சான்றிதழ் பெற்றிருக்கவேண்டும். உணவு நிலையங்களுக்கான குடிதண்ணீர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் அனுமதிக்கப்பட்ட இடத்தில் இருந்து பெறப்பட வேண்டும்.

கடை உரிமையாளர் ஒவ்வொருநாளும் முறையாகக் கழிவகற்றல் நடவடிக்கை எடுக்கவேண்டும். பொருள்களின் நிர்ணயிக்கப்பட்ட விலையை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். ஆலயப் பெருந்திருவிழாவின்போது ஆலயச் சுற்றாடலில் சுகாதார நடைமுறையாகப் பின்பற்றத் தவறும் பட்சத்தில் அல்லது மீறுபவர்கள் மீது சுகாதார நடைமுறைகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆலய வளாகத்தில் புகைத்தல் மற்றும் மதுப்பாவனை தடை செய்யப்பட்டுள்ளதுடன், மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அடியவர்கள் ஆசாரசீலர்களாக ஆலயத்துக்கு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் பெறுமதியான தங்க ஆபரணங்களை அணிந்து வருவதைத் தவிர்க்க வேண்டும் என்று அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னாலை வரதராஜருக்கு இன்று தேர்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை இடம் பெறவுள்ளது.

வசந்தமண்டப பூசையை தொடர்ந்து சுவாமி உள் வீதி வலம் வந்து முற்பகல் [illegible] மணிக்கு வரதராஜப் பெருமான் -பூமா தேவி சமேதராக தேரில் ஆரோகணித்து அருட்காட்சியளிக்கவுள்ளார். தொடர்ந்து உறியடி உற்சவம் நடைபெறும். நாளை வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆஞ்சநேயர் பொங்கலும் இடம்பெறவுள்ளன என்று ஆலய பரிபாலனசபை தெரிவித்துள்ளது. (ச)

# கும்பாபிஷேகம்

வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 9. 27 மணிக்கு இடம்பெறுமென ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ள னர்.

காலை 5 மணி முதல் யாகபூசை, விசேட திரவிய ஹோமம், பூரணாகுதி, தீபாராதனை, திருமறை, திருமுறை பாராயணம் நடைபெற்று, காலை 9.27 மணிக்கு பாலஸ்தாபன கும்பாபிஷேகம், தீபாரா தனை, ஆச்சார்ய சம்பாவனை ஆசீர்வாதம், திருவருட்பிரசாதம் வழங்கல் என்பன நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி2)


# கொழும்பு விலையில்

## யாழ். நகரில் கோழிகள் விற்பனைக்கு உண்டு.

புறொய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ், ஊர்க் கோழி, சேவல், விறாத்துக் குஞ்சுகள்
மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு.
முட்டைகள் அனைத்தும் ஒரே இடத்தில்.
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: **நியு சிற்றி பாம்**
**நியு சிற்றி கோழிக்கடை**
**இல.08, சின்னக்கடை மார்க்கெட், குருநகர். யாழ்ப்பாணம்.**

(CS 26290)A-1



# பெயர் மாற்றம்

இல: 110 வன்னேரிக்குளம் சோலை கிளிநொச்சியில் வதியும் கணபதிப்பிள்ளை பத்மாதேவி ஆகிய நான் எனது பெயரை கணபதிப்பிள்ளை பத்தினிதேவி என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் கணபதிப்பிள்ளை பத்தினிதேவி என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு தெரிவிக்கிறேன்.

(CR 40506) A-1

**கணபதிப்பிள்ளை பத்தினிதேவி**

# மரண அறிவித்தல்



தோற்றம்: 24.01.1955 மறைவு : 05.09.2023

## திரு.பொன்னம்பலம் அழகராஜா

**(ஓய்வுபெற்ற மக்கள் வங்கி உதவி முகாமையாளர்)**

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு.பொன்னம்பலம் அழகராஜா அவர்கள் நேற்று (05.09.2023) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம். அன்னம்மா தம்பதிகளின் அன்பு புதல்வனும், கதிரவேலு-பரமேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற கமலேஸ்வரியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், ஜனன், அனந்தன், சுரேந்தன் (Quantity Surveyor), லசிதா (ஆசிரியை, கஞ/குளோடன் வித்தியாலயம்), ரசாந்தன் (Digital Marketing) ஆகியோரின் அன்புத் தந்தையும், மேனகா, கோபிகா ஆகியோரின் மாமனாரும், செல்வராசா, காலஞ்சென்ற பரராசா, சண்முகராசா, பவளவசணி, விஜயராஜன், தேவகி, ரஞ்சினி, நந்தினி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி, கலாரஞ்சனி, விஜயநாதன், சாந்தகுமாரி, கருணாகரன், காலஞ்சென்ற லோகிதன், நவரத்தினம், சிவஞானம் தர்மேஸ்வரி (உதயா லொட்ஜ்), மகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், அர்ஜுன், அனிஸ்கா, ஹரிசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (05.09.2023) செவ்வாய்க்கிழமை 58, ஹாமஸ் அவனியூ வெள்ளவத்தையில் வைக்கப்பட்டு நாளை (07.09.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 02.00 மணியளவில் கல்கிஸ்சை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**தகவல் - குடும்பத்தினர்**
**0718266963, 0774043264**

# கேள்வி அறிவித்தல்.

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் சபை நிதி 2023

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது சபைநிதியினைக் கொண்டு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
02. **தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்,** சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டட திருத்த வேலைகளுக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020(i) ஆம் இலக்க 11.01.2021 ம் திகதிய 04/2016(ii) ஆம் இலக்க 08.05.2019 ஆம் திகதிய 04/2016(iii) ஆம் இலக்க 18.02.2021 ஆம் திகதிய மற்றும் 04/2016(iv) இலக்க 09.02.2023 ம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக வட மாகாணத்தை சார்ந்தவரும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டுமான துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவா, **பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் தொலைபேசி இல: -021-205 8867, தொலைநகல்: 021-205 8866)** அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 15:00 மணிவரை 2023.09.06 ஆம் திகதியில் இருந்து 2023.09.20 ஆம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்** அவர்களிடமிருந்து 2023.09.06 ஆம் திகதியிலிருந்து 2023.09.20 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09:00 மணிக்கும் 15:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா **2000/-** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர் பெறுகைக்குழு , வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 2023.09.21 ஆம் திகதி மு.ப 10:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வி, கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது
10. கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2023.09.12 ஆம் திகதி மு.ப.10:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41 (13)/2/Council/PV/2023/01 | தலைமை அலுவலக கட்டட விரிவாக்க வேலை கட்டம் 02 | 9.99 | 90 நாட்கள் | C6 , C7 அல்லது C8 ( கட்டட நிர்மாணம்) | 77 நாட்கள் | 100,000.00 | 2024.01.04 |
| NP/14/41 (13)/2/Council/PV/2023/02 | தலைமை அலுவலக கட்டட மிகுதி வேலையும் திருத்தமும் | 19.53 | 150 நாட்கள் | C5, C6 அல்லது C7 ( கட்டட நிர்மாணம் ) | 77 நாட்கள் | 200,000.00 | 2024.01.04 |
| NP/14/41 (13)/2/Council/PV/2023/03 | கல்வியியற் கல்லூரி பின் வீதி திருத்தம் | 2.57 | 90 நாட்கள் | C9, C8 அல்லது C7 (வீதி நிர்மாணம்) | 63 நாட்கள் | 26,000.00 | 2023.12.21 |
| NP/14/41 (13)/2/Council/PV/2023/04 | கடைத்தொகுதி திருத்தம் - கோப்பாய் | 3.41 | 90 நாட்கள் | C9, C8 அல்லது C7 ( கட்டட நிர்மாணம்) | 63 நாட்கள் | 35,000.00 | 2023.12.21 |
| NP/14/41 (13)/2/Council/PV/2023/05 | ஞானவைரவர் வீதி இந்து மயான இணைப்பு வீதி திருத்தம் | 3.66 | 90 நாட்கள் | C9, C8 அல்லது C7 (வீதி நிர்மாணம்) | 63 நாட்கள் | 37,000.00 | 2023.12.21 |

தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்.
2023.09.06

(CR 40501) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்தில் இறந்த மாணவன் உயர்தரத்தில் 2ஏ,பி சித்தி!

வடமராட்சி, கரவெட்டி பகுதியில் கடந்த மாதம் வீதி விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்த மாணவன், உயிரியல் பிரிவில் 2ஏ, பி பெற்று சித்தியடைந்துள்ளார்.

கோவில்கடவை, துன்னாலை மத்தியைச் சேர்ந்த சங்கர் சஞ்சீவி என்ற மாணவன் உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு முடிவுக்காக காத்திருந்த நிலையில், விபத்துக்குள்ளாகி கடந்த மாதம் எட்டாம் திகதி உயிரிழந்திருந்தார். இந்தநிலையில் குறித்த மாணவன் 2ஏ, பி பெறுபேற்றை பெற்று மாவட்ட மட்டத்தில் 97ஆவது இடத்தைப் பிடித்து சித்தி பெற்றுள்ளார். (ம-100)


## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முதியோர் நோயாளர் நிலையத்திற்கு பெண் வேலையாள்கள் தேவை.

077 712 6860 / 59

## வாடகைக்கு

கொக்குவில் கே.கே.எஸ் வீதியில் வீடும் கடையும் வாடகைக்குண்டு.

076 833 7737

## விற்பனைக்கு

1). உபயோகித்த சலவை யந்திரம் (Washing Machine) LG
2). Single door samsung fridge புதியது.
3). இரும்பு கேட் 12'
தொடர்பு:
077 9530 496

## தேவை

யாழ். திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியிலுள்ள எமது நிறுவனத்திற்கு 1). துப்பரவாக்கும் தொழிலாளி
2). வயரிங் பிளம்பிங் தெரிந்த கட்டட பராமரிப்பாளர் தேவை.
தொடர்பு: 077 9530 496


# கண்ணீர் அஞ்சலி

## அகத்தியர் ஆனந்தராசா

(மன்ற உறுப்பிரனர், உரிமையாளர், ஆனந்தா ஸ்ரோர்ஸ் - பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி)

அவர்கள் 04.09.2023 அன்று இறைபதமடைந்தார்.
அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

பிரிவால் துயருறும்
**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

# பெறுகை அறிவித்தல்
# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை

தலைவர் பெறுகைக் குழு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை அவர்களினால் 01.10.2023ஆம் திகதி தொடக்கம் 31.03.2024ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் கீழ்வரும் சேவைகளை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநரிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | சேவை | அ[illegible] எ[illegible]க்கை | பெறுகை பிணை வைப்பு(ரூபா) | |
|---|---|---|---|---|
| | | | தொகை | காலம் |
| NP/14/45(3)/1/OS/2023/02 | சுகாதாரச் சேவை | 04 | 6,000.00 | 06.12.2023 |

01. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கமைவாக[illegible] இக்கேள்வி கோரப்படுகின்றது.
02. தனியார் சேவை வழங்குநர்கள் சேவை வழங்கலுக்கான வியாபாரப் பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 02 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
03. சேவை வழங்குநர்களின் தலைமைக்காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை, தொலைபேசி இலக்கம் 024 324 3544 தொலைநகல் 021 205 0036 மின்னஞ்சல் pallaips@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அலுவலக நாட்களில் 06.09.2023 தொடக்கம் 20.09.2023 ஆம் திகதி மு.ப 09.00 முதல் 15.00 மணிவரை பெறுகை ஆவணங்களைப் பார்வையிடலாம்.
05. சேவை வழங்குநர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் 06.09.2023 தொடக்கம் 20.09.2023 ஆம் திகதி மு.ப 09.00 முதல் 15.00 மணிவரை மீளளிக்கப்படாத பெறுகைப் படிவக் கட்டணமாக ரூபா 2,000.00 (VAT,NBT நீங்கலாக) இனைச் செலுத்தி பெறுகை விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளமுடியும்.
06. கேள்வி ஆவணங்கள் 21.09.2023 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தலைவர், பெறுகைக் குழு, பிரதேச சபை, பளை எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலகத்தில் உள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும்.
07. பெறுகைப் பத்திரம் உள்ளடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகை இலக்கம் எழுதப்படல் வேண்டும்.
08. பெறுகைப்பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேரமுடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்.
09. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள்பெறுகைக் கோரலை கோருவதற்கும் பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உள்ளது.
10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 14.09.2023 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்துகொள்ளமுடியும்.

**திருமதி.தர்சினி தயானந்தன்,**
**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை,**

N.1

**06.09.2023**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிதாய் மலரும்

# சாவகச்சேரி

எழுச்சியடையும் எதிர்காலத்திற்கான புதிய வரவு

இலங்கையின் நிதித்துறையில் முன்னோடியாகத் திகழும் LOLC Finance இன் புதிய கிளை 06.09.2023 இல.267, கண்டி வீதி, சாவகச்சேரி இல் புதிதாக திறந்து வைக்கப்படவுள்ளது. அனைத்து விதமான நிதிசார் தேவைகளையும் இனி ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்.

தங்கக்கடன்

தனிநபர் கடன்

இல.267, கண்டி வீதி, சாவகச்சேரி | தொடர்புகளுக்கு - 077 502 3467

www.lolcfinance.com instagram.com/lolc.finance youtube.com/@lolcfinance facebook.com/LOLCFinanceplc twitter.com/LOLCFinance

LOLC பினான்ஸ்

Zee Tamil சரிகமப-3 இறுதிப்போட்டியாளர்கள் முதன் முறையாக பங்கேற்கும்

# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

பழைய மாணவர் சங்க ஏற்பாட்டில்

TITLE SPONSOR

UNION ASSURANCE
A JOHN KEELLS COMPANY




# மாபெரும் இன்னிசை நிகழ்வு

08 2023 — 6.01 PM முதல் — வவுனியா நகரசபை கலாசார மண்டபம்

09 2023 — 6.01 PM முதல் — யாழ்ப்பாணம் கலாசார மண்டபம்

10 2023 — 6.01 PM முதல் — கொலின்ஸ் விளையாட்டு கழக மைதானம் நெல்லியடி

PLATINUM SPONSOR — MARUTHI MONEY EXCHANGE (PVT) LTD, Northern Central Hospitals

GOLD SPONSOR

SILVER SPONSOR

BRONZE SPONSOR

CO SPONSOR

PRINT MEDIA PARTNER — உதயன்

MEDIA PARTNER

ONLINE MEDIA PARTNER

TICKETING PARTNER

தொடர்புகளுக்கு : 076 1256655


noolaham.org | aavanaham.org

**உலகில் முதன்மையான காடுகளை அழிக்கும் நாடுகளில் இலங்கை நான்காவது இடத்தில் உள்ளது.**

**நாம் காடுகளையும் பேணிப்பாதுகாக்கவில்லை, நீரையும் பேணிப் பாதுகாக்கவில்லை. வேலியில் இருந்த மரங்களையும் அழித்து மதில்கள் ஆக்கிவிடோம்?**

## புதன் பொய்கை

"பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு." -வள்ளுவர்



# சீமை கருவேலை மரங்கள்

# வரமா? சாபமா?


பேராசிரியர் கந்தையா பகீரதன்
துறைத் தலைவர் மற்றும் பேராசிரியர்
விவசாய உயிரியல் துறை
விவசாய பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்


சீமைக் கருவேல அல்லது வேலிக்காத்தான் என தமிழில் அழைக்கப்படும் மரங்கள் புறொசொபிஸ் ஜூலிபுளோறா என்ற தாவரவியல் பெயரைக்கொண்டதாகக் காணப்படுகின்றன. பாபேசியே குடும்பத்தையும், மிமொசொய்டியே உபகுடும்பத்தையும் சேர்ந்த மத்திய, தென் அமெரிக்காவை பூர்வீகமாகக் கொண்ட வறட்சியைத் தாங்கக்கூடிய பத்து அடிவரை வளரக்கூடிய மரமே சீமைக் கருவேல மரங்கள்.

வேளாண் பயிர்களுக்கு வேலியாகவும், சமையலுக்கு விறகுக்காகவும் பயன்படும் என்று நம்பப்பட்டு, கடந்த 1950 - 60களில் வெளிநாட்டிலிருந்து, குறிப்பாக அவுஸ்திரேலியாவில் இருந்து விதைகளாகக் கொண்டு வரப்பட்டு தெனிந்தியா முழுவதும் பரப்பபட்டவையே சீமைக் கருவேல மரங்கள். இவை இலங்கைக்குள் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உவரால் பாதிக்கப்பட்ட மண்ணை மறுசீரமைப்பதற்காகவும் விறகுக்காகவும் சட்டரீதியாக இலங்கை வனவளத் திணைக்களத்தால் கொண்டுவரப்பட்டன.

மூர்க்கத்தனமான அந்நிய ஆக்கிரமிப்புத் தாவரமான இந்த சீமைக் கருவேல மரங்கள், எந்த வறட்சியிலும், கடும் கோடையிலும், வறள் காலநிலையில், களப்பு, நீரேரிகளின் கரையோரங்களில், உவரான மண்பகுதியில் நன்கு வளரக்கூடியவையாகும். மழை பெய்யவில்லை என்றாலும், நிலத்தில் நீரே இல்லை என்றாலும்கூட இவை வளரும் தன்மையுடையவை. ஒரு கருவேலமரம் தனது ஆணிவேரை பூமியில் பல அடி ஆழத்துக்கும், பக்க வேர்களை பல அடிகள் தூரத்துக்கும் பரப்பி நீரை உறிஞ்சி, தன் இலைகளை வாடவிடாமல் பார்த்துக்கொள்கிறது. ஒருவேளை நிலத்தில் நீரே கிடைக்கவில்லை என்றாலும் தன்னைச் சுற்றி இருக்கும் காற்றின் ஈரப்பதத்தை உறிஞ்சி விடுவதாகவும் கூறப்படுகிறது. இந்த மரம் பிராணவாயுவை மிகக் குறைந்த அளவே உற்பத்தி செய்வதாகவும் கரியமிலவாயுவை மிக அதிகளவில் வெளியிடுவதால் சுற்றுப்புற காற்று மண்டலமே நச்சுத் தன்மையாக மாறிவிடுவதாகவும் செய்திகள் பரப்பப்படுகிறது. எனினும், விஞ்ஞானரீதியாக இவை நிரூபிக்கப்படவில்லை.

### சீமைக் கருவேல சூழலுக்குக் கேடா?

மனிதனின் பல்வேறு சூழலியல் விரோத நடவடிக்கைகளால் இன்று பூமி சூடாகி வருகின்றது. புவி வெப்பமடைந்தால் நீர் வற்றிப்போகும். பயன்தரு மரங்களை அழித்தால், வறண்ட நிலத்தில் எந்த மரம் வளருமோ அது தானாகவே வளரும். இது இயற்கை தன்னைத் தானே சீரமைக்கும் நியதி. அந்த நியதிக்கு ஏற்பதான் வறண்ட நிலமெங்கும் சீமைக் கருவேல வளர்ந்தது கொண்டிருக்கிறது.

ஒரு மனிதன் உயிர் வாழ்வதற்குக் கிட்டத்தட்ட 15-18 மரங்கள் தேவை. இன்றைய நிலைவரப்படி மரங்களால் மனிதனுக்குத் தேவையான ஒட்சிசனில் கிட்டத்தட்ட 28 வீதத்தை மாத்திரமே உற்பத்தி செய்ய முடிகின்றது. இலங்கையில் 1882ஆம் ஆண்டில் 83 வீதமாக இருந்த காடுகளின் அடர்த்தி இன்று 16 வீதமாகச் சுருங்கியுள்ளது. மேலும், உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் தரவுகளின்படி, உலகில் முதன்மையான காடுகளை அழிக்கும் நாடுகளில் இலங்கை நான்காவது இடத்தில் உள்ளது. சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை ஆய்வு மையத்தால் பெறப்பட்ட தரவுகளின்படி, 2021ஆம் ஆண்டில் மட்டும் நாளொன்றுக்கு 65 ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. ஒரு நாடு அதன் மொத்த நிலப்பரப்பில் கிட்டத்தட்ட 33 வீதம் காடுகளைக் கொண்டிருந்தால் மாத்திரமே அங்கு அனைத்து உயிரினங்களும் சந்தோசமாகவும் போட்டியில்லாமலும் வாழமுடியும் என்பது யதார்த்தம். நாம் காடுகளையும் பேணிப்பாதுகாக்கவில்லை, நீரையும் பேணிப்பாதுகாக்கவில்லை. வேலியில் இருந்த மரங்களையும் அழித்து மதில்கள் ஆக்கிவிடோம்? வளமான விவசாய பூமியில் இருக்கவேண்டிய 4 வீதம் என்ற காபன் அளவை செயற்கை உரத்தைப் பாவித்து 0.5 வீதம் என்ற அளவுக்குக் குறைத்து மண்ணையும் மலடாக்கிவிட்டோம். அப்போ வறண்ட பூமியில் சீமைக் கருவேல போன்ற மரங்கள் வளர்ந்து காடுகள் ஆகாவிட்டால் யார் இந்தப் பூமி வெப்பமாதலைத் தடுப்பது? அதற்காக சீமைக் கருவேல மரங்களை ஊக்குவிப்பது இந்தப் பத்தியின் நோக்கமல்ல.

காடுசார் சூழலை உருவாக்கும் வரையிலாவது அந்த மரங்கள் எம் சூழலுக்குத் தேவை. போதுமான மரங்களின் இருப்பை - செறிவை உறுதிப்படுத்திய பின்னர் வேண்டுமானால் அவற்றை அழிக்கலாம். சீமைக் கருவேல மரங்கள் நிலத்தடி நீரை உறிஞ்சுகின்றது என்றால் நீர்நிலைகளை அண்டிய பகுதிகளிலும் விவசாய நிலங்களிலும் அவற்றை வளரவிடாது தடுக்கலாம். ஆனால், வறண்ட கட்டாந்தரைகளில் அவற்றை அழிக்கவேண்டிய அவசியம் ஒன்றுமில்லை.

### சீமைக்கருவேலயால் கிடைக்கும் நன்மைகள்

1. சீமைக் கருவேலம் விறகுக்கு மிக உகந்த மரம். இதன் விறகு மெதுவாக எரிவதோடு அதிக வெப்பத்தையும் உற்பத்தி செய்யும்.
2. சீமைக் கருவேலம் கரி, இந்தியாவில் பலதொழிற்சாலைகளில் எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. அதுமட்டுமன்றி பல ஏழைகளின் வாழ்வாதாரமாக இது இருக்கிறது. உயிர்க்கரி மலிவான மூலப்பொருளாகப் பயன்படுத்தலாம். இதன்மூலம் பல மில்லியன் வருமானத்தைப் பெறலாம்.
3. வறண்ட நிலங்களில் வாழும் பல இரை கவ்விகள், ஊர்வன, குடிபெயரும் பறவைகள் எனப் பல உயிரினங்களின் வாழிடங்களாக இவை பல்லாயிரம் உயிர்களைப் பாதுகாக்கிறது. மாற்றுத் திட்டம் இல்லாமல் இவற்றை அழித்தால் அவற்றின் நிலை என்னாகும்?
4. கடற்கரை மணல் குன்றுகளில் காற்றினால் மண்ணரிப்பு ஏற்படுவதை இத்தாவரம் தடைசெய்கிறது. சுனாமி ஏற்பட்டபோது மணற்காட்டு சவுக்கு மரங்கள் அந்தப்பகுதி மக்களையும் மண்ணையும் எப்படிக் காத்ததோ அதேமாதிரி இராமேஸ்வரத்தில் சுனாமி அலைகளைத் தடுத்து பல்லாயிரம் உயிர்களைப் பாதுகாத்தது இந்தச் சீமைக் கருவேல மரங்களே.
5. மோசமான வளமில்லா உப்பு உவர்ப்பு நிலங்களில் இத்தாவரம் வளர்ந்து மைக்கோரைஸா பூஞ்சையை வேரில் கொண்டு வளிமண்டல நைதரசனை மண்ணில் நிலைநிறுத்தி மண்ணை வளப்படுத்துகிறது. தொழிற்சாலைக் கழிவுகள் வெளியேறும் பார உலோகங்கள் கலந்த மண்ணில் இவை வளரும்போது, இவை இந்தப் பார உலோகங்களைத் தமக்குள்ள சேமித்து பக்கவிளைவின்றி மண்ணின் நச்சுத் தன்மையை நீக்குகிறது.
6. இந்த மரங்கள் பேப்பர், கார்போர்ட் அட்டைகள் போன்றவற்றின் தயாரிப்பில் மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.
7. கருவேல மரத்தின் தண்டுகள் வலிமையானதாக இருப்பதால் இவற்றை வீடுகட்ட மற்றும் வீட்டுத் தளபாடங்கள் செய்யப் பயன்படுத்தலாம். இத்தாவரம் விவசாய நிலங்களுக்கு வேலியாகப் பயன்படுத்தப்படுகிறது.
8. சீமைக் கருவேலம் விதைகளை நீக்கிய காய்களானவை இனிப்புகள், ரொட்டிகள், பிஸ்கெட்டுகள் உருவாக்குவதற்கு மூலப்பொருளாக கோதுமைக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படுகிறது.
9. மருந்தாக: சீமைக் கருவேலம் விதைகள் நீரிழிவு நோயாளிகளுக்கான மருந்துப் பொருள்கள் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகின்றன. இத்தாவரத்தின் காயிலிருந்து பெரு, சிலி, அர்ஜென்ரீனா போன்ற தென்னமரிக்க நாடுகளில் மதுசாரம் தயாரிக்கப்படுகிறது.
10. சீமைக் கருவேலம் பழமானது 1214 சதவீத புரதச்சத்தைக் கொண்டுள்ளதால் ஆடு, மாடு, கோழி, பன்றி ஆகியவைகளுக்கு தீவனமாகவும் மற்றும் அடர் தீவனத் தயாரிப்பிலும் பயன்படுத்தலாம்.

இலங்கையின் வடபகுதி உலர் வலயமாக இருப்பதினால், பூகோள வெப்பமாதால் இந்தப்பிரதேசத்தை மேலும் வறண்டதாக மாற்றிவிடும். நாம் செய்யவேண்டியது என்னவென்றால் முதலில் மழைநீர் கடலை அடைய முன்னர் அவற்றைச் சேமிப்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். ஈர நிலங்களை ஈர வலயங்களை உருவாக்க வேண்டும். அதன்பின்னர் ஒரு பசுமைச்சூழலை உறுதிப்படுத்தவேண்டும். இவற்றின் பின்னரே இந்த சீமைக் கருவேல மரங்களை அழிக்கவேண்டும்.

எமது வறண்ட பிரதேசத்தில் நீரைப் பெருமளவில் குடித்து வளரக்கூடிய கரும்புச் செய்கைக்கு பல நூறு ஏக்கர் நிலங்களைக் கொடுத்து மேலும் வறண்ட பிரதேசமாக மாற்றத் தயாராகவுள்ள நிலையில், குளங்களையும் கேணிகளையும், குட்டைகளையும், ஏரிகளையும் மூடி கடைகள், கட்டடங்கள் மற்றும் குடிமனைகள் அமைத்து சுயநலமாக வாழ்ந்துகொண்டுள்ள நிலையில், கருவேல மரங்கள் மட்டும்தான் சூழலுக்குத் தீங்கானவை என்று கூறிக்கொண்டு அவற்றை அழித்தொழிக்க முற்படுவது எத்தகைய ஞானோதயம்?







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சங்க காலத்தில் வணிக நடைமுறைகள் எவ்வாறிருந்தன. அக்காலத்தில் தமிழர்கள் எவ்வாறான வணிகக் கலாசாரத்தைப் பின்பற்றினார்கள் என்பன தொடர்பில் இந்தக் கட்டுரை விரிவாக ஆராய்ந்து எண்பிக்கின்றது. இதன் தொடர்ச்சி அடுத்த வார புதன்பொய்கையில் வெளிவரும்)



பேராசிரியர்
சிவனேசன் சிவானந்த மூர்த்தி
சந்தைப்படுத்தல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

# சங்க இலக்கியங்களில் வணிகமும் வணிக நடைமுறைகளும்



தமிழ் என்பது ஒரு பிரதேசத்தின் அல்லது ஒருநாட்டில் வாழ்கின்ற மக்கள் கூட்டத்தினால் பேசப்படுகின்ற ஒரு மொழியல்ல. மேலுமாய் இன, மத, வேறுபாடுகள் இன்றி அறிஞர்களினாலும், சான்றோர்களினாலும் அறிவியலின் மொழியாக தொன்மையான நாகரிகத்தின் தோற்றுவாயின் அங்கமாக, பக்தியின் மொழியாக, ஓர் இனத்தின் அடையாளமாக கொண்டாடப்படுகின்ற மொழியே. இது உலகில் மிக தொன்மையானதும், செழிமையானதுமான நாகரிகத்தையும் பண்பாட்டையும் கொண்ட தமிழ் இனத்தினால் பயன்படுத்தப்படுவதன் காரணமாக தமிழ் இன்றும் நிலைபெற்றுள்ளது. 'சிந்து வெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்' என்னும் நூலில் தமிழ் இனத்தின் தோற்றமும், எழுச்சியும் பற்றிய பொரும்பாலான ஆய்வுகள் இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்து வெளி நாகரிகத்துடன் தொடர்புபடுத்துவதை அவதானிக்கலாம். மேலும் சமகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட கீழடி ஆய்வுகள் தமிழ் இனத்தின் தொன்மையை கி.மு. 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகத்துடன் தொடர்புபடுத்தியுள்ளதுடன் சிந்து வெளி நாகரிகத்தின் நீட்சியே சங்ககாலம் எனவும் குறிப்பிடப்படுகின்றது. இற்றைக்கு 2500ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியத்தின் பாயிரத்தில் பனம்பாரனார் என்ற புலவர் வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம் என்று கூறுவதன் வாயிலாக தமிழ் இனம் வாழ்ந்த நிலப்பரப்பை புவியியல் ரீதியாக வரையறுக்கமுற்பட்டபோதும். பிற சில தமிழ் இலக்கியங்களில் வடவேங்கடம் தென்குமரி என்பதை புவியியல் ரீதியான எல்லையென நிர்ணயிப்பதில் மாறுபட்ட தன்மை காணப்படுவதை அவதானிக்கலாம். ஆனால், இன்று தமிழன் பாதம்படாத இடம் பாரில் உண்டோ என்று கூறி வியக்கும் அளவுக்கு தமிழர் உலகம் எங்கும் வியாபித்து இருக்கின்றார்கள் என்பது இங்கு எண்ணற்பாலது. தமிழ்மொழயில் காணப்படுகின்ற இலக்கியங்களே தமிழ் மொழியின் சிறப்பு[illegible]ம், தமிழ் பண்பாட்டின் செழிப்புக்கும், செழுமைக்கும் அடிப்படையானதாகவும் வலு சேர்ப்பதாகவும் அமைந்துள்ளன. பண்டைய தமிழ் இலக்கியங்களில், வாழ்வியல் முறைகள், கலைகள், சமய சமூக விழுமியங்கள், நம்பிக்கைகள், அறக் கருத்துகள், காதல், வீரம், காமம், அறிவியல், அரசியல், புவியியல், பொருளியல், அரச கட்டமைப்புகள், சமூக கட்டமைப்புகள், மனையியல், வானியல், சாத்திரங்கள், அன்பு, அருள், வாய்மை, ஈகை, தூய்மை போன்றன பற்றி மிகவும் ஆழமாகவும், அழகாகவும், உணர்வுபூர்வமாகவும் கூறப்பட்டுள்ளன. இப் படைப்பு கள் உருவாக்கிய காலங்களில் இடம்பெற்றிருந்த பண்பாட்டு மேம்பாடுகளை வெளி உலகுக்கு இன்று வரை வெளிக்காட்டி வருகின்றன.

தமிழை மொழியாக நோக்காது ஒரு உயிருள்ள உயிரியாகவே நான் நோக்குகின்றேன் ஏனெனில் தமிழ் உணர்ச்சி மிக்கதும், ஊக்கப்படுத்தும் தன்மை கொண்டதுமாகும். மேலும் விசித்திரமானதும், உணர்வுபூர்வமானதும், நிலையான இயக்கங்களைக் கொண்டுள்ளதும் என்பதால் தமிழ் ஒரு சுயசரிதைக்கு தகுதி யானது என்கிறார் டானியல் எனும் அறிஞர். மேலும் தட்சணாமூர்த்தி என்னும் அறிஞர் தமிழர் நாகரிகமும் பண்பாடும் எனும் நூலில் ஓர் இனத்தின் பண்பாடு அதன் இலக்கியம், மக்களின் நடத்தை, மொழி, கலைகள், சமய கொள்கைகள், குறிக்கோள்கள், பொருளாதார மற்றும் அரசியல் கொள்கைகள், பொருளாதார கட்டமைப்புகள், வணிகமும், வணிக கட்டமைப்பும், அரசியல் வரலாறு, சமுதாய நிலைகள், சமுதாயத்தில் பெண்களின் நிலைகள், அறிவியல் சிறப்பு, கல்வி நிலையங்கள் போன்றவற்றின் மூலம் விளங்கிக்கொள்ள முடியும் என்று குறிப்பிடுகின்றார்.

## தமிழர் பண்பாடு

கடந்த சில தசாப்தங்களாக 'சமூக விஞ்ஞானத்தில்' பல்வேறு துறைகளில் முன்னேற்றகரமான ஆய்வுகள் இடம்பெற்றிருந்தபோதிலும் சமூக விஞ்ஞானத்துக்கு மூலமான அல்லது விளைநிலமான பண்பாடு குறித்த ஆய்வுகளில் குறைந்தளவிலான கல்வியியலாளர்களே தங்களது பங்களிப்பை வழங்கினர். மேலும் இரண்டாம் உலகப் போரின் பின்னர் அறிவுப்புலத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் விளைவாக புதிய கோட்பாடுகளும் பண்பாட்டியல் சிந்தனைகளும் ஆய்வின் வெளியீடுகளாக அமைந்திருந்தபோதும் பண்பாடு, மரபுரிமை குறித்த நோக்கங்கள் மிகக் குறைவாகவே காணப்பட்டன. பண்பாடு சுயாதிபத்தியத்தின் தேர்வாக இனங்கண்டபொழுதும் அது குறித்த ஆழமான, கருத்தியல் ரீதியான ஆய்வுக்குட்படுத்த தவறிவிட்டார். பண்பாடு குறித்த அறிவியல் பார்வையை முன்னோக்கி நகர்ந்ததின் 18ஆம் நூற்றாண்டுகளில் பண்பாடு என்கின்ற பதத்தை அக்கால வாழ்வியல் சமூக மாறிகளுக்குகேற்ப விளக்கியுள்ளார்.

பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கநெறிகள், சட்டம், வழக்கம் முதலானவற்றையும் மனித சமூதாயத்தின் ஓர் அங்கத்தவராக இருந்து கற்கும் பிற திறமைகளையும், பழக்க வழக்கங்களையும் அடங்கிய முழுமைத் தொகுதியாகும் என்கின்றார். பண்பாடு குறித்த இந்த வரைவிலக்கணம் தான் பண்பாடு குறித்த பல்வேறுபட்ட அறிஞர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துகளுக்கு அடிப்படையானதாகக் காணப்பட்டதுடன் பிற்காலத்தில் பண்பாடு குறித்து உருவாக்கம் பெற்ற பெரும்பாலன கருத்தியல்களில் பிரதிபலிப்பதையும் காணக் கூடியதாகவுள்ளது.

# கலைமுகம் - பவள இதழ்: தமிழ் இலக்கியத்தின் காலமுகம்




■ தபின்

ஈழத்தில் சிற்றிதழ்களுக்கான ஆயுள் வெகுகுறைவு. ஆனாலும சிற்றிதழ் முயற்சிகளுக்கும் குறை விருப்பதில்லை. அவ்வப்போது சில சிற்றிதழ்கள் தோன்றி.மின்னி. மறைந்தாலும் பின்னர் இன்னொரு இதழின் உயிர்ப்பு வேறொரு திசையில் நடக்கும். காலங்காலமாக நீட்சியையும் இந்தப் போக்கை மாற்றியமைத்த சிற்றிதழ்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அப்படி ஒரு சிற்றிதழாக. 75 இதழ்கள் வரை தாக்குப்பிடித்து. இப்போது பவள இதழாக வெளிவந்திருக்கிறது 'கலைமுகம்'.

திருமறைக் கலாமன்றத்தின் வெளியீடாக வரத்தொடங்கிய 'கலைமுகம்' சஞ்சிகையானது. கலை. இலக்கிய. சமூக இதழாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டாலும். ஆரம்பத்தில் அது ஒரு மதம்சார் சஞ்சிகை என்ற வகையிலேயே பலரும் நோக்கினர். இதனால் அது போதிய கவனக்குவிப்பைப் பெறத்தவறியது. ஆனால். காலப் போக்கில். குறிப்பாக செல்மர் எமில் பொறுப்பாசிரியராக வந்தபின்னர் கலைமுகத்தின் முகம் முற்றாகவே மாறியது. தனித்துவமான ஒரு கலை. இலக்கிய. சமூகச் சிற்றிதழாக அது தன்னை நிலைநிறுத்திக்கொண்டது. சிற்றிதழ்களின் மீதிருந்த ' குறுகிய ஆயுள்' என்ற சாபத்தை மிகுந்த இடர் பாடுகளின் மத்தியில் வென்று. பவள இதழாக - கனதியாக கட்டுரைகள். சிறுகதைகள். பத்திகள். கவிதைகள் போன்ற இலக்கியவடிவங்களைச் சுமந்து. 240 பக்கங்களில் நிறையிலும். தரத்திலும் கனதியாக கலைமுகம் பவள இதழ் வெளிவந்திருக்கிறது.

சமூகவலைத்தள யுகத்தில். தீவிரமான படைப்புகளில் பெரும்பான்மையான படைப்பாளிகள் நாட்டம் காட்டுவதில்லை. உடனுக்குடன் வருகின்ற விருப்பக்குறிகள். கருத்துகள் என்பவற்றின் எண்ணிக்கையை அதிகரிப்பு சமூக வலைத்தளத்தில் ஒரு போதையாக மாறி. பீல படைப்புகளை தனக்குள் கட்டிப்போட்டுவிட்டது. வாசகர்களும் அப்படித்தான். அவர்களின் வாசிப்பும் இப்போது 'நுனிப்புல் மேய்வதையே' அதிகம் விரும்புகின்றது. அதற்குத் தீனி போடுவதுபோல. எந்தவொரு ஆய்வும். ஆதாரமும். படைப்பாக்கத் திறனும் இல்லாமல் விசைப்பலகை வீரர்கள் 'அடித்து விடுவதையே' ஆராதிக்கவும் செய்கின்றனர். இப்படிப்பட்ட நிலையில். படைப்பாளிகளையும். வாசகர்களையும் வலை வீசிக் கண்டுபிடிக்கவேண்டிய நிலையே சிற்றிதழ்காரர்களுக்கு. தகுந்த படைப்பாளியைக் கண்டறிதல். தொடர்பு கொள்ளல். படைப்பைக் கோருதல். படைப்புக் கிடைக்கும் வரை காத்திருத்தல். காத்திருந்து ஏமாறுதல். கிடைக்கும் படைப்புகளைச் செம்மையாக்கல். விளம்பரதாரர்களிடம் கெஞ்சிக் கூத்தாடி விளம்பரம் எடுத்தல். நூலுருவாக்கல். வாசகர்களைத் தேடிக் தேடிக் கண்டுபிடித்து விற்பனை செய்தல். விற்பனை செய்யப்பட்ட இதழுக்கான பணத்தைப் பெற அலைந்து திரிதல் என ஒவ்வொரு இதழையும் கொண்டு வந்து அதனை வாசகர்களிடம் சேர்ப்பிக்கும் வரை ஒரு மரணப்போராட்டத்தையே சிற்றிதழ்காரர்கள் சந்திக்கவேண்டியிருக்கிறது. அப்படி ஒவ்வொரு இதழிலும் கடைசியாக அவர்களுக்கு எஞ்சுவதென்னவோ சலிப்பும். காலவிரயமும். காசிழப்பும்தான். ஆனால். அவற்றையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு. அடுத்த இதழ் நோக்கிய பயணத்துக்கு அவர்கள் புறப்பட்டுவிடுவார்கள். இப்படியான போராட்டங்களும். சலிப்புகளும். ஏமாற்றங்களும் கலைமுகத்துக்கும் இப்போதுவரை உண்டு. ஆனாலும் அது தன் வரவை நிறுத்தவில்லை. ஒவ்வொரு இதழும் இன்னும் முன்னரைவிடவும் தாக்குவன்மை கொண்ட படைப்புகளில் தன்னை இன்னும் உறுதிப்படுத்தி நிலைநிறுத்தியிருக்கிறது. அதை இந்தப் பவள இதழ் இன்னும் உரத்துச் சொல்கிறது. குறிப்பாக; பவள இதழின் ஆசிரியதலையங்கத்தில். கலைமுகம் கடந்து வந்த பாதையும். அது புடம் போடப்பட்ட பயணங்களையும். இலக்கியத்தின் எதிர்கால ஏக்கத்தையும் காத்திரமாக வெளிப்படுத்துகின்றது. இன்றைய பொருளாதார நெருக்கடி மிகு காலகட்டத்தில் ஒரு சிற்றிதழாக கலைமுகத்தின் பவள இதழ் கொண்டுள்ள படைப்புகளின் செறிவும். வடிவமைப்பு நேர்த்தியும் அதன் பின்னுள்ள உழைப்பை நினைத்து வியக்க வைக்கின்றன. அந்த உழைப்புக்கு 1.200 ரூபா விலையென்பது மிகச்சிறியதொகையே. ஆனால். 'ஒரு புத்தகம் ஆயிரத்து இருநூறுரூபாயா?' என வாய்பிளக்கிறார்களே தவிர. இந்த இதழுக்குள் பொதிந்துள்ள உழைப்பின் கனதியை உணரத்தவறிவிடுகின்றனர். அந்த மன நிலையை உடைத்து. கலைமுகம் பவள இதழை வாங்குவது சிற்றிதழ்களின் மீது நேசமும். அவற்றின் தொடர்ச்சியான இருப்பின் மீது அக்கறையும். தமிழ் இலக்கியங்கள் மீதான பிடிப்பும் 'கொண்டோரின் கடமை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# அலெக்ஸ் பரந்தாமன் எழுதிய பறையொலி

நூல் ஆய்வு
செ.மகேஷ்

‘எழுத்தாளன் என்ற நிலைக்கப்பால் கதைகள் எழுதுபவன் என்னும் மன ஓட்டத்திலே என்னைச் சுற்றிள்ள மனிதர்களை நான் அணுகுகிறேன்’ என்று கருத்துரைக்கும், 'மக்கள் எழுத்தாளர்' எனப் பலராலும் அறியப்பட்ட அலெக்ஸ் பரந்தாமன் எழுதிய அண்மையில் வெளிவந்திருக்கும் சிறுகதை நூல் பறையொலி.

அதன் அட்டைப்படம் அழகானது. அச்சுப் பதிப்புத் தெளிவானது. அதனை வாசிக்கத் தூண்டிய மொழிநடை நூலின் இறுதிப் பக்கம்வரை வாசகனைச் சோரவிடாமல் அழைத்துச் செல்கிறது. எழுத்தாளரின் எட்டுச் சிறுகதைகளைத் தொகுத்தளித்திருக்கும் இந்தநூல் மக்களின் வாழ்வுப் பிரச்சினைகளையே முன்வைத்துப் புனையப்பட்டுள்ளன. கதைகளின் வழி சொல்லப்பட்டுள்ள பிரச்சினைகளும் அவற்றை மக்கள் எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்களும் சுவைபடச் சொல்லப்பட்டு கதை ஒவ்வொன்றின் முடிவுகளும் அவை கருத்துரைக்கும் சோதனைகளுக்கான தீர்வுகளும் மனந்தொடுகின்றன.

அலெக்ஸ் பரந்தாமனின் கதை சொல்லும் பாங்கு வாசகனை வாசிப்பில் ஈர்க்கிறது. எமது மண்ணில் நடந்த, நடக்கின்ற சம்பவங்களை இலக்கியச் சுவைபட எழுதுகின்ற அவருடைய மொழிச் சிறப்பு பறையொலி சிறுகதைத் தொகுப்பை வாசித்துக் கிரகித்துச் சுவைத்துத் துவங்க வைக்கும் மகிமையைக் கொண்டுள்ளது. சிறுகதைக்கென அவர் தேர்ந்த வாழ்வின் மனந்தொடும் அம்சங்கள் பாராட்டுக்குரியவையாகின்றன.

நாளைய சந்ததியினர் ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பின் ஊடாக எமது வரலாற்றுப் பின்னணியையும் அறிந்துகொள்ள இந்தத் தொகுப்பு வகை செய்திருகின்றது. கதைகள் எழுதுபவன் தாம் கண்டு அனுபவித்த இன்பங்களையும், துன்பங்களையும் எழுதும்போது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உணர்வை வெளிப்படுத்தும் சொற்களஞ்சியப் பயன்பாடு வேண்டும் என்பதற்கு இவரது எழுத்தாற்றல் ஆதாரமாகின்றது.

நூலின் தலைப்பாகத் தரப்பட்டுள்ள சிறுகதை "பறையொலி' நம் சமூகத்தை விட்டுச் மறைய மறுப்பதாக உணரும் சாதியம் சார்ந்து வரையப்பட்டுள்ளது. இன்றைய இளைய சமூகம் இந்த ஏற்றத் தாழ்வுகளுக்கும் அப்பால் தமது சமநிலையைப் பேணும் உயரத்துக்கு உயர்ந்திருந்தாலும் நாம் எமது பழமையைவிட்டு விலகாது அதனைத் தூக்கிச் சுமக்கும் வேதனையுடன் பயணிக்கவும் செய்கிறோம் என்பதையே இக்கதை பறைசாற்றுகிறது. ஆங்காங்கே எம் சமூகத்திடையே அறுபட்டுத் தொங்கும் சாதியம் அழிய மறுத்தாலும் அதன் ஊடாகத் தாம் ஒரு வலிமை பொருந்திய குழுவினராக முன்னேற எத்தனிப்போரை இக்கதை சிந்திக்கத் தூண்டுகிறது. இதில் தொகுக்கப்பட்டுள்ள சிறுகதைகள் யாவும் ‘சிறுகதை மஞ்சரி’ எனும் மாத சஞ்சிகையில் வெளிவந்தவை என்பது குறிப்பிடத்தக்கதாகும். அலெக்ஸ் பரந்தாமனின் பறையொலி அரியதொரு சிறுகதைத் தொகுப்பு என்பதை அதனை வாசிக்கும் வாசகர் ஒவ்வொருவரும் உணர்வர் என்பது நிச்சயமாகும்.

---

# திருநாவுக்கரசு மாதிரிப் பண்ணை ஆரோக்கிய சமூகத்துக்கு சான்று




எந்தவொரு நாடு விவசாயத்தை, கால்நடை உற்பத்திகளை, பண்ணை மேலாண்மையைப் பலப்படுத்துகின்றதோ அந்த நாட்டின் பொருளாதாரமே உயர்ந்து ஓங்கும். அந்த வகையில், இலங்கையின் பொருளாதாரத்தில் இன்று மாதிரிப் பண்ணைகள் மிகமிக அவசியமானவையாகவும், தவிர்க்க முடியாதவையாகவுமே மாறியிருக்கின்றன. இத்தகைய மாதிரிப் பண்ணைகளுக்கும் அதன் செயற்பாட்டுக்கும் இலக்கணமாகத்தான் இலங்கையின் வடக்கே யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் திருநாவுக்கரசு என்னும் மாதிரிப் பண்ணை செயற்பட்டு வருகின்றது. முற்றிலும் இயற்கை வழி அமைந்த மாதிரிப் பண்ணையை நித்தியானந்தன் என்பவர் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து சிறப்பாக நடத்தி வருகிறார்.





மகேஸ்வரன் சுஜாந்தினி
மூன்றாம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்

### யார் இவர்?

விவசாயத்துறையில் 1973ஆம் ஆண்டிலிருந்து பரீட்சயம் பெற்ற நித்தியானந்தன், விவசாயத் திணைக்களம் ஊடாக இங்கிலாந்து சென்று விவசாயப் பொறியியல் துறையில் பட்டம் பெற்றார். உலகப் புகழ்பெற்ற இலுப்பலகம ஆராய்ச்சிப் பண்ணையில் 10 வருடங்களாகப் பணியாற்றிவர். ஆரம்ப காலங்களில் அவுஸ்திரேலியாவில் பல ஆண்டுகளாக தமிழ் பொறியியலாளராகப் பணியாற்றிய இவர், இலங்கையிலும் விவசாயத் திணைக்களத்தில் பணியாற்றியுள்ளார். பின்னர் தான் பெற்ற அறிவு, உற்சாகம், அனுபவம் என்பன பண்ணை உருவாக்கத் தூண்டுகோளாக அமைய தனது ஓய்வுகாலத்தை பயனுள்ளதாக மாற்றிய மைக்க மாவிட்டபுரத்திலே தனது நண்பர்களுடன் இணைந்து இலாப நோக்கற்ற வகையில் 'திருநாவுக்கரசு மாதிரிப் பண்ணை' எனும் பெயரில் இந்தப் பண்ணையை 8 வருடங்களின் முன் ஆரம்பித்துள்ளார். திருநாவுக்கரசு என்பவர் சமூக செயற்பாட்டுக்காக மக்களின் நன்மைக்காக பண்ணை அமைப்பதற்கு இரண்டரைப் பரப்புக் காணியை தந்தமைக்கு நன்றியாக பண்ணைக்கு 'திருநாவுக்கரசு' மாதிரிப் பண்ணை எனப் பெயர் சூட்டியுள்ளனர்.

### நித்தியானந்தன் சொல்வதென்ன?

இந்தக் கட்டுரைக்காக நித்தியானந்தனை ஒரு மாலைப் பொழுதில் சந்திக்க வேண்டியிருந்தது. இந்தச் சந்திப்பின்போது அவர் பகிர்ந்துகொண்ட விடயங்கள் வருமாறு:-

மக்களுக்கு இரண்டு பிரச்சினைகள் உள்ளன. ஒன்று நிலத்தடி நீர் உப்பு நீராக மாற்றமடைகிறது, நச்சுப் பழங்கள், மரக்கறிகள் என்பவற்றைச் சாப்பிட்டு மருத்துவமனையில் மக்கள் அதிகமாக நிற்கின்றனர். இதிலிருந்து மக்களை மீட்க இயற்கை விவசாயம் மிக முக்கியமானது. இந்தச் சிந்தனையின் வெளிப்பாடுதான் இந்த மாதிரிப் பண்ணை. இதனை பண்ணையாக இல்லாது மக்கள் இயக்கமாக வளர்க்கவேண்டும் என விரும்பினேன். ஆனால், இந்த மாதிரிப் பண்ணையை உருவாக்குவதை விடவும் அதைத் தொடர்ந்து நடத்துவதே கடினமாக உள்ளது. இலாப நோக்கமற்ற பண்ணையாக இருப்பதால் செலவினங்களைக் கையாள்வது அன்று தொடக்கம் இன்றுவரை மிகவும் சவாலாகவே இருக்கின்றது. எனினும், இந்தப் பண்ணையை முன்னேற்றுவதற்குப் பல உதவிகள் கிடைத்திருக்கின்றன. அதாவது மண்புழு உரம் உற்பத்தி செய்தல், ஆடு மாடுகளுக்கு கொட்டில்கள் அமைத்தல் இந்த விடயங்களில் உதவிகள் செய்திருக்கின்றார்கள். தக்காளி, வெண்டி, மிளகாய் போன்ற பல்லாயிரக்கணக்கான பயிர்களை உற்பத்தி செய்து வருகின்றோம். வெற்றுப் பைகளையும் உற்பத்தி நாற்றுமேடைகள் அமைத்து அவற்றை விற்பனை செய்து வருகின்றோம் என்கின்றார் அவர்.

### இயற்கைப் பசளை

இயற்கை விவசாயத்தில் மிக அடிப்படையான ஓர் உள்ளீடு கூட்டெரு. இது, வெறும் குப்பைகளில் இருந்து உருவாகின்ற விடயமாகும். அத்துடன் இயற்கை விவசாயத்துக்காக மாடு, ஆடு ஆகியவற்றின் எருவைக் கொண்டும் இங்கு கூட்டெரு தயாரிக்கப்படுகின்றது. வீட்டுத்தோட்டம் செய்பவர்கள், விவசாயிகள் அவற்றை வாங்கிச் செல்கின்றனர். இந்தப் பண்ணை மூலம் தயாரிக்கப்படும் உரம் இன்று பலரால் பயன்படுத்தப்படுகின்றது. மண்புழு உரத்தை ஆங்கிலேயர்கள் 'பிளக் கோல்ட்' என சொல்வார்கள். மண்புழுக்களின் எச்சத்திலிருந்து இந்த உரம் தயாரிக்கப்படுகிறது.

### பண்ணையும் பயிர்களும்

இந்தப் பண்ணையில் கடந்த எட்டு வருடங்களாக எந்த இரசாயனப் பதார்த்தங்களும் பயன்படுத்தப்படவில்லை. பயிர்கள் நன்கு செழித்து வளர்ந்துள்ளன. நீரின் இருப்பை உறுதிப்படுத்தும் வகையில் சொட்டுநீர்ப் பாசன முறையில் இங்கு பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மிகக்குறுகிய குழாமினருடன் சிறப்பாகச் செயற்பட்டுவரும் இந்த மாதிரிப் பண்ணையை எத்தனை பாராட்டினாலும் அது தகும். இவ்வாறான பண்ணைகள் கிராமந்தோறும் உருவாக்கப்பட்டால் அது ஆரோக்கியமான சமூகத்தின் முதுகெலும்பாகவும் திகழும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் தோற்றம் தொடர்பில் உதயன் புதன்பொய்கையில் கடந்த வாரம் வெளியான கட்டுரையின் தொடர்ச்சியே இது. இந்தப் பகுதியில் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய அதிபர்கள் தொடர்பில் பதிவாகின்றது)

# அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் தோற்றப் பின்னணி

பழைய மாணவன், அளவையூர், சைவப்புலவர்
**பண்டிதர் வைத்திலிங்கம் பாலகிருஷ்ணன்**
B.A (peradeniya), B.A(Hons) Jaffna
M.A (peradeniya), Dip.in Human Resource(India)
ஓய்வுநிலை கமத்தொழில் சேவை பெரும்பாக உத்தியோகத்தர்.

### நான் கண்ட எனது அதிபர்கள்


**3. அதிபர் அ.விஸ்வநாதன்**

அதிபர் சிதம்பரப்பிள்ளை ஓய்வுபெற்றதும் உபஅதிபராக இருந்த அ.விஸ்வநாதன் அதிபரானார். இவர் அளவெட்டிக் கிராமத்தின் பொதுத்தொண்டுகளில் ஈடுபட்டதுடன் கல்வி, சமயம், சமூகம் என சேவைப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். கல்லூரியின் மாணவர்களின் ஒழுக்கத்துக்குப் பொறுப்பாசிரியராகச் செயற்பட்டவர். ஒழுக்கத்தை உயிரினும் மேலாக பேணுவதற்கு மாணவச் செல்வங்களை நெறிப்படுத்தியவர். ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் புலமை மிக்கவரான இவர், றோயல் கல்லூரிக்கு ஆசிரியராக வரும்படி அழைப்புக் கிடைத்தும் அதனை நிராகரித்து அருணோதயக் கல்லூரியின் வளர்ச்சி தான் தன்னுடைய குறிக்கோள் எனக்கொண்டு கல்லூரியின் ஆசிரியப் பணியை தொடர்ந்தும் மேற்கொண்டார். இவர் 2008ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி இறைபதம் அடைந்தார்.

**4. அதிபர் சு.ஆனந்தகுமாரசுவாமி**

இவர் புகழ்பூத்த கல்விமானும் அதிபருமான மயிலிட்டி சுவாமிநாதனின் மைந்தன். 1970ஆம் ஆண்டு ஆவணி மாதமளவில் அதிபராகப் பதவியேற்றார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டதாரி. ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் மிகச்சிறந்த புலமையாளன். கலை, கலாசாரப் போட்டிகளில் மாணவர்களை ஊக்குவித்து தேசிய மட்டத்தில் பரிசில்பெறத் தூண்டுதலாக இருந்தார். கல்லூரியின் விளையாட்டுத்துறையில் மறுமலச்சியை ஏற்படுத்தினார். இவரின் வருகையின் பின்னர் 1971 ஆம் ஆண்டில் உதைபந்தாட்டப் போட்டியில் 2ஆம் பிரிவில் கல்லூரி சம்பியனானது. மாணவர்களுக்குத் தொழிற்கல்வியைப் புகட்ட வேண்டும் என்ற நோக்கில் விவசாயம், மனையியல், நெசவு போன்ற பாடநெறிகளை மாணவர்கள் பயில்வதற்கு வழிசமைத்துக் கொடுத்தார். 1970 இல் இளைஞர் விவசாயக் கழகத்தை கல்லூரியில் ஆரம்பித்து மாணவர்களை நவீனமுறையில் விவசாயத் தொழில் நுட்பங்களை பயில்வதற்கு வழியேற்படுத்திக் கொடுத்தார். 1972 இல் கல்லூரியின் கட்டடத் தேவையை நிறைவு செய்யும் நோக்கில் நிதி சேகரிப்புக்காக நாடக விழாவை ஏற்பாடு செய்து, அதில் ஆசிரியர்களையே நடிகர்களாக நடிக்க வைத்து ரிக்கட் விற்பனை செய்வித்து பெருமளவு நிதியைத் திரட்டி கட்டட வேலையை நிறைவு செய்தார்.


திரு. அ. விஸ்வநாதன் அவர்கள், B. A. (LOND.)


திரு. எஸ். ஆனந்தம் குமாரசுவா

1973ஆம் ஆண்டு இவர் மாற்றலாகி மாதகல் சென். ஜோசப் கல்லூரிக்குச் சென்றார். ஆனந்த குமாரசுவாமி எனது ஆங்கில ஆசிரியர். நான் கல்லூரியின் சிரேஷ்ட மாணவத் தலைவனாக இருந்த காரணத்தால் இவருடன் நெருங்கிப்பழகும் வாய்ப்பு கிடைத்தது. அதன்மூலம் அவருடைய அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான மாணவனானேன். 1985ஆம் ஆண்டு அவர் இறைவனடி சேரும்வரை எனது தொடர்பு பேணப்பட்டது. பின் வந்த அதிபர்களில் எனது ஆசிரியராக இருந்த ந.சிவபாதம் கல்லூரியின் நாடகம், கலை, கலாசாரம், சாரணியம் போன்ற துறைகளுக்குப் பொறுப்பாக இருந்து அவற்றின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர். இவரையும் இவ்வேளையில் நன்றி மறவாச்சிந்தனையால் நினைவுகூருவதில் பேருவகை அடைகிறேன். இவர் தற்போது கொழும்பில் வசித்து வருகின்றார். நான் கொழும்பு செல்லும்வேளையில் அவரைச் சந்தித்து உரையாடுவதற்குத் தவறுவதில்லை.

தற்போது அதிபராக இருந்து ஓய்வுபெற்ற நாகலிங்கம் கேதீஸ்வரன் எனது தமிழ் ஆசான் பண்டிதர் க.நாகலிங்கத்தின் மகன். நான் அருணோதயக் கல்லூரியில் பயின்றவேளை இவர் ஆரம்பப் பிரிவு மாணவனாக இருந்து கல்வி பயின்றவர். காட்சிக்கு எளியவர். கடுஞ்சொல் பகராதவர். மாட்சிக்குரியவர். சொல், செயல், சிந்தனையின்படி செயற்படுபவர். இவர் காலத்தில் கல்லூரி அரும்பெரும் சாதனைகளை நிலைநாட்டியுள்ளது. தேசிய மட்டத்தில் விளையாட்டு, கலை, கலாசாரப் போட்டிகளில், பரீட்சைப் பெறுபேறுகளில் முன்னனி வகித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் உயர்தர வகுப்பில் மருத்துவம், விஞ்ஞானம், கலை, வர்த்தகத் துறைகளில் மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தகுதி பெற்று தெரிவு செய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. கேதீஸ்வரனின் காலம் அருணோதயக் கல்லூரியின் வரலாற்றில் இதுவரை கண்டிராத பொற்காலம் ஆகும்.

முற்றும்

---

# நினைவு நல்லது நூல் வெளியீடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் அனுசரணையில், பி.விக்னேஸ்வரனின் 'நினைவு நல்லது' நூலின் வெளியீட்டு விழாவானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

ஊடகத்துறையில் தனது ஐம்பதாண்டுகளுக்கும் மேலான அனுபவப் பகிர்வினை உள்ளடக்கி பி.விக்னேஸ்வரன் இந்த நூலை உருவாக்கியுள்ளார்.

இலங்கையில் அவர் ஆற்றிய கலைப் பணிகள், வானொலியில், தொலைக்காட்சித் துறையில் தயாரிப்பாளராக, செய்தி வாசிப்பாளராக ஆற்றிய பணிகள் பல்வகைமைச் சூழலில் அவருக்கிருந்த வாய்ப்புகள், எதிர்கொள்ளப்பட்ட சவால்கள், புலம்பெயர் நாட்டில் ஊடகப் பணிகள் எனப் பலதரப்பட்ட விடயதானங்களை ஒன்றிணைத்து ஊடகத்துறைசார் ஆவணமாக, ஆயிரம் பக்கங்களுக்கு அண்மித்ததாக இந்த நூலை பி.விக்னேஸ்வரன் தந்துள்ளார்.




நிகழ்வுக்கான தலைமையுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராமும், வரவேற்புரையை ஊடகக்கற்கைகள் துறையின் தலைவர் பூங்குழலி சிறிசங்கீர்த்தனனும், நூலுக்கான வாழ்த்துரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னைநாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கமும், அறிமுகவுரையை சிரேஷ்ட ஊடகவியலாளர் கணபதி சர்வானந்தாவும் நிகழ்த்தினர்.

நூலுக்கான ஆய்வுரையை அரசியல் ஆய்வாளர் நிலாந்தனும், நயப்புரையை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப் பிரிவின் முன்னைநாள் பணிப்பாளர் எஸ்.விஸ்வநாதனும் வழங்கினர். ஏற்புரையை நூலாசிரியர் பி.விக்னேஸ்வரன் ஆற்றினார். நன்றியுரையை ஊடகக் கற்கைகள் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் டினேஸ் நிகழ்த்தினார்.

---



# 'நீ கொன்ற எதிரி நான் தான் தோழா'

தமிழ்த் தேசியக் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில், புலம்பெயர் எழுத்தாளர் கவிஞர் தியாவின் 'நீ கொன்ற எதிரி நான் தான் தோழா' எனும் கவிதை நூல் வெளியீடு கடந்த 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கரைச்சி பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றது.

ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வனின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா, கரைச்சிப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன், கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் தர்மரட்ணம், முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரியின் அதிபர் திருமதி சூரியகுமாரி இராசேந்திரம், துணுக்காய் கல்வி வலய ஆசிரியர் ஆலோசகர் சுந்தரலிங்கம் லோகேஸ்வரன், ஆசிரியர் அருணாசலம் சத்தியானந்தன், தேசியக் கல்வி நிறுவகத்தின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் [illegible] மூத்த எழுத்தாளர் குரு சதாசிவம், யாழ். பல்கலைக்கழக மாணவர்களான [illegible] ஆகியோரோடு கவிஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

- தேவிஆனந்த -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 28 . 10 . 1956



இறப்பு 05 . 09 . 2023

## திருமதி அரியரட்ணசோதி புனிதவதி

காரைநகர் கதிர்காமசுவாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் பசறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அரியரட்ணசோதி புனிதவதி நேற்று (05.09.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆனந்தராசு - சிவஞானம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகளும், அரியரட்ணசோதி (கலாரெக்ஸ் - உரிமையாளர் - பசறை) அவர்களின் அன்பு மனைவியும், சிவகலா, பரணீதரன் (உதவி தபால் அதிபர் - கோப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலகுமார் (ஆசிரியர் - யாழ். மத்திய கல்லூரி), சிந்து (விலை மதிப்பீட்டுத் திணைக்களம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தனுபன், தனுஷன், துவாரகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற ஜீவமணி மற்றும் ஸ்ரீகரன் (A/O), மனோகரன் (அவுஸ்ரேலியா), தவராணி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.09.2023) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பசறை பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 072 473 5165

தகவல்: குடும்பத்தினர்

(cs 51986) (N-1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 07 . 1945



மறைவு 04 . 09 . 2023

## சிவகடாச்சம் உருத்திராணி

யாழ்ப்பாணம் நீராவியடியைப் பிறப்பிடமாகவும் புளியங்கூடல் மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகடாச்சம் உருத்திராணி நேற்றுமுன்தினம் (04.09.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா அன்னபூரணம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான லைற் வேலுப்பிள்ளை தங்கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற மெக்கானிக் சிவகடாச்சத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், கணகாம்பிகை (பேபி), சிவாநந்தன், சறோஜினிதேவி (சறோ), விபுலானந்தன், நவரத்தினராசா, தவனீதராசா மற்றும் திருச்செல்வம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற மகேஸ்வரி, நடராசா, இராசரத்தினம் மற்றும் யோகேஸ்வரி, சுலோஜனா, கோகிலாம்பாள், செல்வலோஜினி, ஹேமலதா ஆகியோரின் மைத்துனியும், கெங்காரூபி, சிவநேசன், றமணதாஸ், வசந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், கேசவராசா, புஸ்பமாலா, சுஜாத்தா (பிரான்ஸ்), சுரேஸ்குமார் ஆகியோரின் பாசமிகு மாமியும், பிரணவரூபன் (பிரான்ஸ்), பிரவிதா, பிரவீன், சஜித்தா, சன்ஜிகா, நகுசன், திருசன், சார்லிகா, டிலக்ஷிகா, ஆதித்தன், கிஷாந் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2023) புதன்கிழமை மீசாலை கிழக்கு, மீசாலையில் உள்ள அவரது இல்லத்தில் காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிபிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,
சீயோன் தேவாலய வீதி,
மீசாலை, சாவகச்சேரி.

தகவல்: பிள்ளைகள்
077 367 4991, 077 188 0299

(cs 51983) (N-1)


# விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி

இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

எமது நிறுவனத்தில் கல்வி கற்று வெளியாகிய பெறுபேறுகளின் அடிப்படையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| பெயர் | மாவட்ட நிலை | மாவட்டம் | பாடம் |
|---|---|---|---|
| T.டிலக்ஷன் | 01 | கிளி. | ET |
| I.ரேஸ்மரிஷி | 01 | கிளி. | BT |
| S.சுஜிதரன் | 02 | யாழ். | ET |
| S.பிரியந்தன் | 02 | கிளி. | ET |
| S.நிலோஜன் | 03 | யாழ். | ET |
| S.சாருஜன் | 03 | முல்லை | ET |
| S.சரணியா | 03 | யாழ். | BT |
| R.பாதுஷன் | 04 | கிளி. | ET |
| S.துதிசன் | 04 | யாழ். | BT |
| T.காவியா | 05 | யாழ். | BT |
| S.சாம்சன் | 06 | கிளி. | ET |
| A.குருபரன் | 07 | கிளி. | BT |
| P.ஜோன்சன் | 07 | தி.மலை. | ET |
| T.தனோஜன் | 08 | யாழ். | BT |
| S.சிந்துஜன் | 09 | கிளி. | ET |

விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரியில் கற்று பொறியியல் தொழில்நுட்ப பிரிவில் - 53 மாணவர்களும், உயிர்முறைமைகள் தொழில்நுட்ப பிரிவில் - 27 மாணவர்களும் மொத்தமாக 80 மாணவர்கள் இம்முறை பல்கலைக்கழகத்திற்குச் செல்கின்றனர்.
விரிவான விபரங்களை தெரிந்துகொள்ள எமது முகப்புத்தகத்தை பார்க்கவும்.
wisdomtechnicalcollege

புதிய வகுப்புகள் ஆரம்பம் [2025]

[2023,2022]இற்கான Day class, Paper class ஆரம்பம்

துரித மீட்டல் வகுப்புகளும் ஆரம்பம்

தொடர்புகளுக்கு :077 248 7774

(CR 40504) A-1


# மரண அறிவித்தல்

தோற்றம் 22 - 10 - 1937



மறைவு 05 - 09 - 2023

## பேராயிரம் இராசலட்சுமி (பேராயிரம் ரீச்சர்)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட பேராயிரம் இராசலட்சுமி அவர்கள் நேற்று (05.09.2023) செவ்வாய்க்கிழமை அதிகாலை 3.45 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அல்லைப்பிட்டி சரஸ்வதி வித்தியாலயம், சிவப்பிரகாசம் வித்தியாலயம், யாழ். இளையதம்பி வித்தியாலயம் மற்றும் பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் முன்னாள் ஓய்வு பெற்ற ஆசிரியராவார். அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - அன்னமுத்து தம்பதியரின் செல்வப்புதல்வியும், காலஞ்சென்ற ஏரம்பு - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும், பேராயிரத்தின் அன்பு மனைவியும் இராஜராஜன் குகப்பிரியா, ஸ்ரீதுவாரகபால் கிருஷ்ணா, காலஞ்சென்ற கரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற குமரகுரு, ஐயாத்துரை, அன்னலட்சுமி, வசந்தலட்சுமி ஆகியோரின் சகோதரியும், இராசலோசினி, செல்வமணி, காலஞ்சென்றவர்களான குணரத்தினம், இராசையா ஏகாம்பிகை, இரட்ணலிங்கம் மற்றும் சரவணபவன், நடனசண்முகம் ஆகியோரின் மைத்துனியும், துஸ்யந்தி, இளங்கோ மற்றும் கமலினி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆருஷன், விசாகன், அகநிலா, சிவரக்ஷா, நிலாகரன், அங்கயன் மற்றும் தெய்வீகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.09.2023) வியாழக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
இல.33, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை.

குகப்பிரியா - மகள் (கனடா - 16477453447 )
S. கமலினி - மருமகள் (யாழ்ப்பாணம் - 074 313 1729)
[illegible] - பெறாமகன் (யாழ்ப்பாணம் - 076 385 9685)

(CS 26289 ) (K-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்த்தஞாயிறுத் ...

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்து சென்று, மஹிந்த ராஜபக்ச மற்றும் கோத்தாபய ராஜபக்சவுக்கு அரசியலில் மிகவும் விசுவாசமாக செயற்பட்ட பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் என்று அறியப்படும் ஆசாத் மௌலானா, இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சனல் -4 ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலின் அடிப்படையிலேயே இந்தத் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

'என்னால் இந்தப் பாவத்தை என் வாழ்நாள் முழுவதும் சுமந்துசெல்ல முடியாது. நான் உண்மையைச் சொல்ல வேண்டும்' என்று அந்தக் காணொலியை ஆரம்பிக்கின்றார் ஆசாத் மௌலானா. அதில் அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

'என்னிடம் ஆபத்தான கைதிகள் உள்ளனர், அவர்கள் கடும்போக்கானவர்கள். அவர்களில் ஒருவரை சந்திக்க வேண்டும் என்று பிள்ளையான் என்னிடம் கேட்டுக் கொண்டார். இதையடுத்து இஸ்லாமிய தீவிரவாத அமைப்பான தேசிய தவ்ஹீத் ஜமாத்தை சேர்ந்த செய்னி மௌலவியை நான் சந்தித்தேன். 'இதுவொரு நல்ல சந்தர்ப்பம். நாம் அவர்களைப் பயன்படுத்துவோம்' எனப் பிள்ளையான் எனக்குக் கூறினார். அத்துடன், உளவுத்துறை அதிகாரி சுரேஷ் சாலேக்கும் அந்த அமைப்பினருக்கும் இடையில் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்யுமாறு 2018 ஆம் ஆண்டில் பிள்ளையான் எனக்குத் தெரிவித்தார். இதையடுத்து நான் தேசிய தவ்ஹீத் ஜமாத்தை சேர்ந்தவர்களுக்கும் உளவுத்துறை அதிகாரி சுரேஷ் சாலேக்கும் இடையிலான சந்திப்பை கிழக்கில் ஒரு கைவிடப்பட்ட பகுதியில் ஏற்பாடு செய்தேன். இதன்போதே செய்னி மௌலவி தனது சகோதரனான சஹ்ரானை எனக்கு அறிமுகப்படுத்தினார். அதன் பின் நான் உளவுத்துறை அதிகாரியான சுரேஷ் சாலேயை அவருக்கு அறிமுகப்படுத்தினேன்.

குறித்த சந்திப்பு நிறைவடையும் வரை நான் வெளியில் காத்துநின்றேன். சந்திப்பு நிறைவடைந்து வெளியில் வந்த சுரேஷ் சாலே 'ராஜபக்சக்களுக்கு இலங்கையில் ஒரு குழப்பமான நிலை தேவையாக உள்ளது. அதுவே கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதியாக்குவதற்கு அவர்களிடமுள்ள ஒரேயொரு வழி' என்று கூறினார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற பின்னர் யாரெல்லாம் சந்திப்பில் கலந்துகொண்டார்களோ அவர்களின் முகங்களை நான் அடையாளப்படுத்தி படங்களை வெளியிட்டேன்.

முதலாவது படம் சஹ்ரான். அவர் தான் அமைப்பின் தலைவரும் தற்கொலை தாரியுமாவார். இதன் பின்னர் நான் பிள்ளையானுடன் கதைத்தேன். அப்போது அவர் 'நீ வாயை மூடிக்கொண்டு எதுவும் தெரியாததுபோல் இரு. அதுபோதும்' என்றார். அவர்களது மக்களையே ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற அவர்கள் கொலைசெய்தார்கள். இதுவொரு கசப்பான உண்மை' என்று அந்த வீடியோவில் மேலும் தெரிவித்துள்ளார்ஆசாத் மௌலானா. இந்த வீடியோவால் தென்னிலங்கை அரசியலில் பெரும் பரபரப்பு நிலை ஏற்பட்டுள்ளது. (அ-ம-44)

## ஈஸ்டர் தாக்குதல்...

கேள்வி எழுப்பினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'2019ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் நானும் வேட்பாளராகக்களமிறங்கினேன். அந்தத்தேர்தலில் கோத்தாபய ராஜபக்சவுக்கு வாக்களிக்குமாறு பேராயர் கூறியதாக இங்கு கூறப்பட்டது. தேசியப் பாதுகாப்பு தொடர்பில் பிரச்சினையொன்று இருந்தது. அதைப் பாதுகாப்பதில் நாம் தோல்வியடைந்திருந்தோம், கோத்தாபய ராஜபக்ச வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அவருக்கு வாக்களித்திருக்கலாம்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரிகளைக் கண்டு பிடிக்க எமது நாட்டு அதிகாரிகளுக்கு வெளிநாட்டு ஊடகங்கள்தான் சொல்ல வேண்டுமா? பிரதான சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்க எமக்கு வெளிநாட்டு ஆலோசனை வேண்டுமா? உண்மையைக் கண்டறிய இந்நாட்டில் உள்ள அரசியல்வாதிகளுக்கு மனச்சாட்சி இல்லையா? உண்மையைக்கண்டறியுங்கள். எனக்கு எதிராக வாக்களிக்குமாறு பேராயர் கூறியிருந்தால் அது தொடர்பில் எனக்கு கவலை இல்லை. மனக்கவலையால் அவ்வாறு கூறி இருக்கலாம். அந்த வேதனை கத்தோலிக்க மக்கள் மத்தியில் இன்னும் உள்ளது. எனவே, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டிய சூத்திரதாரிகளைக் கண்டறிய சர்வதேச விசாரணை அவசியம். பேராயரையோ, கத்தோலிக்க மக்களையோ அகௌரவத்துக்கு உட்படுத்தவேண்டாம். இந்த சர்வதேச விசாரணையை முன்னெடுக்க அரசுக்கு முதுகெலும்பு உள்ளதா?'- என்றார். (அ-ம-44)

## வீடியோ....

கொழும்பு, செப். 6

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான 'சனல்-4' வீடியோ அப்பட்டமான பொய்யாகும். அதன் பின்புலம் என்ன வென்பதை விரைவில் அம்பலப்படுத்துவோம் என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே பெரமுனவின் எம்.பி.க்களான மஹிந்தானந்த அளுத்கமகே, சரத் வீரசேகர ஆகியோர் 'சனல்-4' வீடியோ தொடர்பான தகவல்களை நிராகரித்தனர்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட மஹிந்தானந்த அளுத்கமகே,

'ஜனாதிபதி தேர்தலில் கோத்தாபயராஜபக்சவை வெற்றிபெறவைப்பதற்காகவே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்ற போலியான தகவல் முன்வைக்கப்பட்டுள்ளது. தெற்கில் சிங்கள-பௌத்த தலைவரை ஆட்சிக்கு கொண்டுவருவதற்கான திட்டமே இது வெனவும் அந்த 5 நிமிட வீடியோவில் விவரிக்கப்பட்டுள்ளது.

வெள்ளைக்கொடி ஏந்திவந்தவர்களை சுட்டுக்கொன்ற இராணுவம் உள்ள நாடுதான் இலங்கை என்ற வீடியோக்களை வெளியிட்ட 'சனல் -4' ஊடகம்தான் தற்போது இந்த வீடியோவையும் வெளியிட்டுள்ளது. 'சனல்- 4 'ஊடாக குற்றச்சாட்டை முன்வந்துள்ள மௌலானா என்பவர் சுவிற்ஸர்லாந்தில் தஞ்சம் கோருபவர். அவரது வங்கிக் கணக்கில் கோடிக் கணக்கில் பணம் இருக்கின்றது. அவர் நிதி மோசடியில் ஈடுபட்டவர். அந்த நபருக்கு எதிராக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் உள்ளன. இப்படியான நபர்தான் தெற்கில் சிங்கள-பௌத்த தலைவரை ஆட்சிக்கு கொண்டுவருவதற்காக உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடத்தப்பட்டது எனக் கூறுகின்றார்.

2018 உள்ளூராட்சித் தேர்தலில் பெரமுன அமோக வெற்றிபெற்றது. உயிர்த்தஞாயிறுத் தாக்குதலுக்கு முன்னரே எமக்கு மக்கள் ஆணை கிடைத்துவிட்டது. எனவே, இப்படியான செயல்களில் ஈடுபட வேண்டிய தேவை எமது தரப்புக்குக் கிடையாது.

ஒரு சிங்கள- பௌத்த தலைவரை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்கு எதற்காக முஸ்லிம் அடிப்படைவாதிகள் 9 பேர் தற்கொலை செய்துகொள்ள வேண்டும்? அவ்வாறு செய்வார்களா? அவர்களுக்கு மூளை இல்லையா? இதை யார் நம்புவது? தற்கொலைக் குண்டுதாரிகள் தாக்குதலுக்கு முன்னர் வீடியோவொன்றை வெளியிட்டனர். அதில் காரணமும் கூறப்பட்டுள்ளது. அடிப்படைவாதிகளின் தேவைக்காகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஜெனிவா தொடர் நடைபெறும் காலப்பகுதியில்' சனல் - 4 'இப்படியான வீடியோக்களை வெளியிடுவது வழமை. இதன்பின்னணியில் புலம்பெயரிகளும், என்.ஜி.ஓ. காரர்களுமே உள்ளனர். நாட்டில் தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்துவதே இதன் நோக்கம். நாட்டில் உறுதியற்ற தன்மையை ஏற்படுத்தப்பார்க்கின்றனர்- என்றார்.

இது தொடர்பில் சரத்வீரசேகர கருத்து வெளியிடுகையில், இதற்கு முன்னரும்' சனல் -4 'சில வீடியோக்களை வெளியிட்டுள்ளது. அவை போலியானவை என்பதை நிரூபித்துள்ளோம். சிங்கள- பௌத்த தலைவரை கொண்டுவருவதற்காக முஸ்லிம்கள் தற்கொலை செய்து கொள்வார்களா? எமது நாட்டு இராணுவத்துக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலேயே இந்தச் செயல் செய்யப்பட்டுள்ளது' -என்றார். (அ-ம-44)

## கொக்குத்தொடுவாயில்...

ருந்தநிலையில், இன்று அந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் நேற்றையதினம் முன்னெடுக்கப்படுவதாக இருந்தது. முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் கடந்த ஓகஸ்ட் 31ஆம் திகதி இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், சீரற்ற காலநிலை காரணமாக நேற்று அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவில்லை. இந்த நிலையில், அகழ்வுப் பணிகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் நேற்றுக் காலை கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி தொடர்பான வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் தொடர்ச்சியாக பி.ப. 3 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி த.பிரதீபன், முல்லைத்தீவு மாவட்ட சட்ட மருத்துவ அதிகாரி க.வாசுதேவா, யாழ்ப்பாணம் சட்டமருத்துவ அதிகாரி, தொல்லியல்துறைப் பேராசிரியர் ராஜ் சோமதேவ, வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், சட்டத்தரணிகளான கே.எஸ்.நிரஞ்சன், ரனித்தா ஞானராசா, தடயவியல் பொலிஸார் உள்ளிட்டவர்கள் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி உள்ள இடத்துக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டனர். பின்னர் குறித்த மனிதப் புதைகுழி இனம்காணப்பட்ட பகுதியில் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது. இதையடுத்து இன்றையதினம் அகழ்வுப் பணிகள் இடம்பெறுவது உறுதிப்படுத்தப்பட்டது. (அ-ம-246)

## ஜனாதிபதியைக் ..

கொழும்பு, செப். 6

ஜனாதிபதியைக் கொல்வதற்கு 'சினைப்பர்' வீரர் தேவை என்று பேஸ்புக்கில் பதிவிட்ட நபர் சி.ஐ.டி யினரால் கைது செய்யப்பட்டு அவரிடம் தீவிரமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ சித்தார்த்தா தேசிய பாடசாலையின் 150ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொள்ளவிருந்த ஜனாதிபதியைக் கொலை செய்ய சினைப்பர் தாக்குதல் நடத்துவதற்கு வீரர் தேவை என அந்த இளைஞர் பேஸ்புக்கில் பதிவிட்டதையடுத்தே அவர், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டு தீவிர விசாரணை வளையத்தில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர், கணினி மற்றும் கைத்தொலைபேசி விளையாட்டுக்களுக்கு அடிமையாகியுள்ளார் என முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரியவந்துள்ளது. (அ-ம)

## 'சனல்-4' வீடியோ....

குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:

இவ்விவகாரம் தொடர்பில் விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பது பற்றி எதிர்காலத்தில் தெளிவுபடுத்தப்படும். ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தொடர் நடைபெறவுள்ள நிலையில்தான் இவ்வாறான வீடியோக்கள் வெளியிடப்படுகின்றன. ஆயினும், இந்த வீடியோவில் உள்ள விடயங்களை நாம் ஆராய வேண்டும். இதில் மாற்று கருத்துக்கு இடமில்லை' என்றார். (அ-ம-44)

## ராஜபக்சக்களின் சூழ்ச்சிகளை புரிந்துகொள்ளவேண்டும்

கொழும்பு, செப்.6

பிரதமர் பதவியை ஏற்கவேண்டும் என்று அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கோத்தாபய ராஜபக்ச அழைப்பு விடுத்திருந்தார். மறுபுறத்தில் அரசியல் சூழ்ச்சிமூலம் ரணிலைப் பிரதமராக்குவதற்கு ராஜபக்ச தரப்பு நடவடிக்கை எடுத்தது. -இவ்வாறு ஜே.வி.பியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உரிய வேலைத்திட்டத்துடனும், மக்கள் ஆணையுடனும்தான் நாம் ஆட்சியைப் பொறுப்பேற்போம். முதலில் வேலைத்திட்டத்தை முன்வைத்து, நாம் ஆட்சியைப் பொறுப்பேற்கின்றோம், நீங்கள் (கோத்தா) பதவிவிலக வேண்டும் எனக் கூறினோம். இதற்கமைய வேலைத்திட்டத்தையும் முன்வைத்தோம். ஆனால், எந்தவித முன்னறிவித்தலும் இன்றி ரணில் பிரதமர் பதவியை ஏற்றார், அவருக்குதான் ராஜபக்சக்களும் பதவியை வழங்கினர். இதுதான் அவர்களின் அரசியல் சூழ்ச்சி. ராஜபக்சக்கள், ரணில், பிரேமதாஸக்களுக் கிடையில் தற்போது அரசியல் சண்டைபோல் காண்பிக்கப்பட்டாலும், அமெரிக்கத் தூதரகத்தின் தலையீட்டால் அவர்கள் இணைக்கப்படுவார்கள். அதேவேளை, இரு மாதங்களுக்கு முன்னர் ரணில் கருத்துக் கணிப்பொன்றை நடத்தியுள்ளார். ஜனாதிபதித் தேர்தல் பற்றியே அந்தக் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டுள்ளது. இதில் ரணிலுக்கு 9 வீதம், சஜித்துக்கு 18 வீதம், மொட்டுக்கட்சிக்கு 7 வீதம், அநுரவுக்கு 43 வீதம் எனப் பெறுபேறு கிடைத்துள்ளது. '- என்றார். (ஏ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறந்தும் வாழ்வளித்த மாணவிக்கு '3ஏ'

கொழும்பு, செப்.6
திடீர் தலைவலி காரணமாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு மூளைச்சாவு அடைந்து உயிரிழந்த மாணவிக்கு தற்போது வெளியாகிய உயர்தரப் பரீட்சை பெறு பேற்றில் மூன்று பாடங்களிலும் 'ஏ' பெறுபேறுகள் கிடைத்துள்ளன.

குருநாகல் - மலியதேவ மகளிர் கல்லூரியின் உயர்தரப் பாடசாலை மாணவியான 19 வயதுடைய விஹகன ஆரியசிங்க என்ற மாணவிக்கே இந்தப்பெறுபேறு கிடைத்துள்ளது. அவர் வணிகப் பிரிவில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில் மூன்று 'ஏ' சித்திகளைப் பெற்று முதலிடம் பிடித்துள்ளார்.

அதேவேளை, மூளைச்சாவடைந்து உயிரிழந்த மாணவியின் உடல் உறுப்பு தானத்தால் தற்போது ஏழுபேர் மறுவாழ்வு பெற்றுள்ளனர். மாணவியின் இருதயம், கல்லீரல், கண், சிறுநீரகம் மற்றும் நுரையீரல் என்பன ஏழு நோயாளிகளுக்கு வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டு அவர்கள் தற்போது தேகாரோக்கியத்துடன் உள்ளனர். (ஏ-இ)

## ஒரு மாம்பழம் ரூபா 250,000!

நாகர்கோவில் முருகையா தேவஸ்தான மாம்பழத் திருவிழாவின்போது ஒரு மாம்பழம் இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டுள்ளது. (ம100)

### பல்கலைக் கழக அனுமதி கை ஏடு (2022 - 23)

**2022 - 2023**
**புதிய கல்வியாண்டுகான பல்கலைக்கழக அனுமதிக் கை ஏடு இன்று முற்பகல் 10.00 மணியில் இருந்து விற்பனையாகும்.**
**விலை - 1000/-**

பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம் - 021 222 6693

### தேவை

இணையவழி ஊடாக கணிதம் மற்றும் ஏனைய பாடங்களை (முதன்நிலை மற்றும் இரண்டாம் நிலை) (Primary and Secondary) மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை. (உயர் ஊதியம் வழங்கப்படும்)

Whatsapp / Normal. 077 363 8337
Paulrajll01@gmil.com

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோயில் முன்பாக 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்.
- நகுலேஸ்வரர் மகாவித்தியாலயத்தில் இருந்து 250 m மீற்றர் தூரம். நகுலேஸ்வரர் ஆலயம் 50 m மீற்றர் தூரம். பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m மீற்றர் தூரம்.
- செம்மண்கான் நன்னீர் ஊற்றுநிலம். வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம். நல்ல சூழல்.
- 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.

**நிலப்பரப்பு**
**பார்வையிடும் நேரம் :-**
காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை

தொடர்பு:- குரு 076 755 8606, 077 8743 204, 077 2880 152.

# TECHNO WORLD

TECHNO WORLD
INNOVATIVE IDEAS OPEN NEW WORLD

## தொழில்நுட்பக் கல்லூரி

(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை)

**இம்முறை தேசிய, மாவட்டரீதியில் முதல் நிலை பெற்ற மாணவர்கள் தொடர்ந்தும் ஆறாவது முறையாகவும் முன்னிலையில்**

### உயிர்முறைமைகள் தொழில்நுட்ப பிரிவு (BIO SYSTEMS TECHNOLOGY

| Name | Rsultse | Rank | Name | Rsultse | Rank | Name | Rsultse | Rank |
|---|---|---|---|---|---|---|---|---|
| அஸ்வினி | A2B | 01 | சஜீனா | C2S | 06 | சங்கீதா | 2CS | 18 |
| நிரோமி | B2C | 02 | ஜீரோசி | 2CS | 07 | குகப்பிரியா | B2C | 20 |
| அபிவர்சான | B2C | 02 | சயந்தினி | A2B | 07 | தவருக்சன் | 3C | 22 |
| கனிஸ்கா | 3B | 02 | தனுசா | C2S | 07 | தர்சிகா | 3C | 22 |
| அன்ரனிஸ் | 3B | 02 | அர்சணா | B2C | 07 | திலக்சிகா | 3C | 24 |
| நந்தவி | 3C | 03 | டிலுக்சினி | C2S | 09 | மிருதார்தன் | 3C | 24 |
| அகுஸ்ரா | 2BC | 03 | ஜெயதர்சினி | 2CS | 11 | தர்சிகா | C2S | 24 |
| டென்சியா | 2BS | 04 | ரிகானி | C2S | 12 | திலக்சிகா | 3C | 24 |
| ரேமியன் | 3C | 05 | சதுர்சிகா | B2C | 13 | தர்சிகா | 3C | 25 |
| காவியா | A2B | 05 | யதுர்சினி | 2CS | 13 | சமந்தி | 3C | 26 |
| செறின் | 3A | 06 | பவித்திரா | 2BC | 14 | பிரவினா | 2CS | 28 |
| தேனுஜா | B2C | 06 | சிவஸ்துதி | B2C | 16 | சுபுகரினி | 2BC | 31 |
| அனுசிகா | ABC | 06 | ரகசா | 2CS | 17 | குகப்பிரியா | 2CS | 35 |

### பொறியியல் தொழில்நுட்பம் (ENGINEERING TECHNOLOGY)

| Name | Rsultse | Rank | Name | Rsultse | Rank | Name | Rsultse | Rank |
|---|---|---|---|---|---|---|---|---|
| திபன்பரபாகர் | 2AB | 01 | ஜானுசன் | 3C | 07 | இனியவன | 3C | 31 |
| கிருபாகரன் | 2AB | 03 | றோங்கில் | B2S | 08 | ராகுலன் | 3C | 39 |
| நிலோஜன் | 3B | 03 | சிந்துஜன் | 2CS | 09 | தனுசாந் | B2C | 40 |
| கனிஸ்ரன் | 2AB | 04 | லக்சன் | C2S | 09 | சப்றொன் | A2B | 42 |
| பதுசன் | 2BC | 04 | மார்க்டெக்சன் | C2S | 10 | பிரதீபா | B2C | 43 |
| லக்சனா | 2AB | 05 | ஜதுசன் | A2B | 10 | புஸ்பகுமார் | 3C | 47 |
| மிரின்டா | 3C | 06 | ஜசியா | 2BC | 22 | பசித் | B2C | 05 |
| சாம்சன் | BCS | 06 | தமிழழகன் | B2C | 24 | மனுஜன் | 2CS | 05 |
| மேரி ஜெர்மிலா | A2B | 07 | பகீரதன் | B2C | 27 | சகீப் | B2C | 05 |

**A/L 2023 Day Class புதிய பிரிவுகள்**

ஆரம்பம் : 08.09.2023 நேரம் : மாலை - 3.30

Phone No. 077 017 5346

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் சின்னையா பாலச்சந்திரன் (சந்தனா)

திதி: ஸப்தமி (06.09.2023)

அன்புடன் எமை அரவணைத்து எம் வாழ்வில்
என்றும் வழிகாட்டி ஒளியூட்டிய தெய்வமே!
பண்புடன் பக்குவமும் பரிவும் மேலோங்க
- இப்பாரினிலே
குன்றிலிட்ட தீபம் போல் ஒளிர்ந்த பெருந்தகையே!
கண்ணும் கருத்துமாய் கனிவுடன் எப்போதும்
- எமை காத்து
மண்ணில் மதிப்புற மனிதத்துடன் எமை வளர்த்திட்ட
- மகத்துவமே!
விண்ணுலகம் ஏகி ஆறாப் பெருந்துயரில் எமை ஆழ்த்தி
ஆண்டொன்று கடந்திடினும் நீக்கமற நிலைத்திருக்கும்
உங்கள் நினைவலைகளுடன் என்றும் நாங்கள்

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா இறைவனின் திருவடி நிழலில் இளைப்பாறப் பிராந்த்திக்கின்றோம்

தோற்றம் 19.09.1969 | மறைவு 18.08.2022

அல்லாரை தெற்கு,
மீசாலை.

நீங்கா நினைவுகளில்
குடும்பத்தினர்
077 271 9275



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.